# மட்டுவில் ஆலயத்தில் நேற்று பொங்கல் நடைபெறவில்லை

Riegstered as a News pape In Ceylon விலைசதம் 15

★

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

EELANADU

மலர் 11
இதழ்:57

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
தேசிய தினசரி

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் பங்குனி 26 முஹறம் 20 செவ்வாய்க்கிழமை 8-4-69]

யாழ்ப்பாணம், செவ்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் நேற்று வருடாந்தப் பொங்கல் நடைபெறவில்லை.

ஆலய வீதிகளெல்லாம் பொலிஸ்மயமாகவேகாணப்பட்டது. உதவி பொலிஸ் சுப்ரிண்டன் ஜனுப் அஸீஸ், சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. துரைசிங்கம் ஆகியோரது தலைமையில் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பலத்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். கோவிலின் மூன்று வாசல்களிலும் பொலிஸார் காவல்புரிந்து கொண்டிருந்தனர். சரசாலை சந்தியில் சகல வாகனங்களையும் பொலிஸார் சோதனையிட்டே அனுமதித்தனர். தனிப்பட்டவர் பலரும் பரிசோதனைக்குள்ளானர்கள்.

நேற்று பொங்கல் பொங்குவதற்கான ஆயத்தங்களோடு வந்த பலர் பொலிஸாரின் ஆலோசனையின் பேரில் பொங்கல் பொங்காது கற்பூரம் எரித்து தமது நேர்த்திகளை முடித்துச்சென்றனர்.

யானமாலைசனசமூகநிலைய மண்டபத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் நேற்று ஒரு கூட்டத்தை நடத்தினர். பெண்களும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதில் இருநூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## இயக்கம் கண்டம்

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

மிகவும் புனிதத்துக்குரிய பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தைச் சுற்றியிருந்த பாதைகளை அடைத்து அந்தப்பாதைகளில் ''உத்தரவின்றி உட்பிரவேசிக்கக் கூடாது'' என்ற அட்டைகளைத் தொங்கவிட்டதன் மூலம் அரசாங்கமே கோவிலைக் கையேற்றுவிட்டதென்பது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. ஆலயம் திறக்கப்பட்டாலோ, பொங்கல் நடந்தாலோ, அவைகளில் எல்லாம் கலந்து கொண்டு வழிபாட்டு நிலைமையை நிலைநாட்டுவதென்ற வெகுஜன இயக்கத்தின் தீர்மானத்தை ஏற்று வழமைபோலச் சென்ற பக்தர்கள் பொலிசாரின் அறிவித்தல் அட்டைகளைக்கண்டு பெரிதும் வெறுப்படைந்துள்ளனா.

வெகுஜன இயக்கத்தின் போராட்டம் தொடரும். எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆலயம்திறக்கப்பட்டு பூசைகள் நடந்தாலும் மக்கள் தங்கள் வழிபாட்டுரிமையை நிலைநாட்டத் தவறமாட்டார்கள். தெய்வ சிந்தனைக் கொப்பான இந்தப் புதிய வழிமுறையை, சட்டத்தை நிலைநிறுத்தும் பொலிசாரே செய்துவருவதை வெகுஜன இயக்கம் நன்ருக ஆராய்ந்து இந்தப்புதிய அடைப்பு முறையை, எதிர்ப்பது பற்றிய முடிவை மிக விரைவில் எடுக்க இருக்கிறது.''

# நிபந்தனை ஒத்துழைப்பையும் கைவிட்டு வெளியேறுவர்

## தமிழரசு மகாநாட்டில் பெரும்பான்மை ஆதரவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

**தேசிய அரசாங்கத்துடனன தொடர்பை உடனடியாகத் துண்டித்து' எதிர்க்கட்சியுடன் சேர்ந்து இயங்கவேண்டுமெனத் தமிழரசுக்கட்சிப் பொதுச்சபை அங்கத்தவர்கள் பலரும் தமிழரசுத் தலைமைப் பீடத்தை நேற்று வலியுறுத்தினர்.**

கடந்த நான்கு ஆண்டுகளில் தேசிய அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையே இருந்துவந்த உறவினுல் திருமலையில் இடம்பெற்றிருக்கும் சிங்களமக்கள் குடியேற்றப் பிரச்னை பற்றியும் நேற்று உடுவிலில் நடைபெற்ற தமிரசுக்கட்சி விஷயாலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

நேற்றுக்காலை உடுவிலில் நடைபெற்றதமிழரசுக்கட்சி விஷயாலோசனைக் கூட்டம் மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நடைபெற்றது.

கட்சியின் புதிய தலைவர் திரு. எம். ராஜமாணிக்கம் தலைமையில் [illegible] இந்தமுதற் [illegible] கிலங்கை உறுப்பினர்கள், முஸ்லிம் உறுப்பினர்கள், [illegible] னர்.

திருக்கோணமலை சிங்கள மக்கள்குடியேற்றம் சம்பந்தமாகப் பதிலளிக்கையில் தமிழரசுத்தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம்இது ஒரு சிக்கலான பிரச்னையென [illegible] அங்குள்ள சிங்களவர் [illegible] விவசாயப்படை சம்பந்தமாக தாம் பேசியதாகவும் கூறி விவசாயப் படைகளில்

## 'காணியற்ற வறியவருக்கு காணிகளை வழங்குக'

யாழ்ப்பாணம், செவ்.

பல வருடங்களாக சொந்தக்காரரால் பாவிக்கப்படாதிருக்கும் காணிகளையும் உறுதிகள் மற்று யாருக்கும் சொந்தமில்லாமலிருக்கும் காணிகளையும் உண்மையான உறுதிகளுள்ள காணிகளையும் சுவீகரித்து அக் காணிகளில் தற்போது வசிப்போருக்கும் காணியற்றவறியோருக்கும் பங்கிட்டு வழங்க மேயர் நடவடிக்கை எடுகக வேண்டுமென்று கோரும் பிரேரணை யொன்றை 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். ஜே. அன்ரனி அடுத்த மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கொண்டு வரவிருக்கிருர்.

முடிக்குரிய தரிசு நிலங்களையும் சுவீகரித்து அக்காணிகளில் தற்போது வசிப்போருக்கும் காணியற்றவர்களுக்கும் பங்கிட்டு வழங்குமாறும் இப் பிரேரணையில்கேட்டுக்கொள்ளப்பட விருக்கிறது.

இதற்கான முன்னறிவித்தலை திரு அன்ரனி கொடுத்துள்ளார்.

தே. நி.

# 'தமிழர் எங்கு வாழ்ந்தாலும் ஒரே இனத்தவர்தான்

# 'வேலையற்ரேருக்கு விமோசனம் என்ன?'

யாழ்ப்பாணம், செவ்.

பொதுத்தேர்தல்கள் வந்துபோகலாம், ஆட்சியிலிருக்கும் கட்சிகள் மாறலாம். ஆனுல் நாட்டில் வளர்ந்து வரும் வேலையற்ருேரின் எண்ணிக்கை விரிவடைகிறது. வலையற்ருேர் பெரும்படையில் சமத்துவம் நிலவுகிறது. சிங்களவரும் தமிழரும் பல லட்சம் பேர் காணப்படுகின்றனர். பட்டதாரிகள் ஜீ. சி. ஈ. சித்தி பெற்றவர்கள் டாக்டர்கள் கூட இந்தப் பெரும்படையில் அணிதிரண்டுகொண்டிருக்கின்றனர். மக்களின் அடிப்படை பிரச்சினைகளில் ஒன்றுவேலைவாய்ப்புகளை அதிகரிக்கச் செய்ய வேண்டும். என்ற கோரிக்கையே. இவற்றை ஏற்று சமாளிக்க தவறும் அரசுகள் அரசியலில் இருந்து அப்புறப்படுத்தப்படும் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆகும் என்றபடி இப்பிரச்னைகளை அணுகித் தீர்க்கத்தவறின் எந்த அரசியல் கட்சிகளும் அஸ்தமனம்தென்படும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். பிரதேசக்குழுவின் செயலாளரான திரு. வ. பொன்னம்பலம் நல்லூரில்நடைபெற்ற கட்சி கூட்டமொன்றில் பேசும்போது கூறினுர்.

மேலும் அவர் பேசும்போது கூறியதாவது.

சோசலிச வடிவிலான ஒரு சமூக அமைப்புள்ள நாடுகளில் வேலையிலலாதோர் பிரச்னை என்று எதுவும் இலலை. சனநாயகம்.

பேசும் இங்கிலாந்தில் வேலையற்ருேருககு அரசாங்கம் வாழக்கைச்சம்பளம் வழங்கி வருகிறது. எமது நாட்டிலும் வேலையற்ருேருக்கு வேலைவாய்ப்பு அல்லதுவாழ்க்கை வேதனத்தை அரசாங்கமே முன்வந்து தரவேண் வேண்டும் இது அரசாங்கத்தின் கடமை. வடபகுதியில் நில நெய் தொழிலை அபிவிருத்தி செய்வதன் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து எமது பகுதி வாலிபர்களுக்கு தொழில் பெறும் வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்ய வேண்டும். (கா. நி)

## தமிழரசு ம நாடு

### இன்றைய நிகழ்ச்சிகள்

காலை 9 மணி

தமிழ்நாட்டில் விரைவில்

## நீதிமன்றங்களில் தமிழ்மொழி

சென்னை, ஏப். 7

தமிழ்நாட்டில் மாவட்டம் விரைவில் தமிழ் மொழியை நீதிமன்றங்களில் உபயோகிப்பதற்கான ஏற்பாடுகள் மிக விரைவில்எடுக்கம்படும்.

இத்தகவலை முதலமைச்சர் திரு. மு கருணுநிதி நேற்று சலத்தில் வழக்கறிஞர்கள் கூட்டமொன்றில அமரர் அண்ணுதுரையின் உருவப்படமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்

## நாட்டியவர்

யாழ்ப்பாணம், செவ்

கோண்டாவிலில் புதிய மின்தறி நிலயக் கட்டடத்துக்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். கந்தவனம் சமீபத்தில் அத்திபாரக்கல் நாட்டியதாக நேற்று 'ஈழநாடு' பத்திரிகையில் படத்துடன் விளக்கம் தரப்பட்டிருந்தது. அடிக்கல் நாட்டியவர் கிராமாபிவிருத்தி சிறுகைத் தொழில் உதவி அதிபர் திரு. எஸ். கந்தவனம் என்றிருகக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழர் எங்கு வாழ்ந்தாலும் ஒரே இனத்தவர்தான் மகாநாட்டில் கலந்துகொள்வதால் மகிழ்ச்சியடைகிறேன்'

## பலாலி விமானநிலையத்தில் ம. பொ. சி.



யாழ்ப்பாணம், செவ்வாய்

''தமிழர் எங்கு வாழ்ந்தாலும் மொழி, கலை, கலாசாரத்தால் ஒரே இனத்தவர் என்பது எனது தமிழரசுக் கழகத்தின் கொள்கை அந்தக்கொள்கையின் அடிப்படையில் எனது இனத்தவரான - எனது குடும்பத்தவரான உங்கள் மத்தியில் வந்திருக்கின்றேன். அத்துடன் இலங்கை-இந்திய உறவு மேலும் வலுப்பெற எனது வருகை பயன்படும் என்பது எனது நம்பிக்கை.''

இலங்கை தமிழரசுக்கட்சியின் 11-வது மாநில மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்றுவந்த தமிழக சட்டசபை உறுப்பினரும் தமிழரசுக்கழகத் தலைவருமான திரு: ம. பொ. சிவஞானக்கிராமணிகள் பலாலி விமான நிலையத்தில் பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை திரு. ம. பொ. சி. யை பலாலி விமானநிலையத்தில் தமிழரசு ஆதரவாளர்கள் பலர் கூடி வரவேற்றனர்.

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் விமான நிலையத்தில் ம. பொ. சி. க்கு முதலில் மாலைசூட்டி வரவேற்ருர். மகாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர், உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம், மட்டக்களப்பு எம். பி. திரு. செ. ராஜதுரை, மன்ஞர் எம். பி. திரு. அழகக்கோன், கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் உட்பட பலர் ம. பொ. சி. க்கு மலர்மாலை சூட்டிஞர்கள். தமிழரசு வாலிப முன்னணி சார்பில் திரு. குணராஜா மாலைசூட்டி வரவேற்கையில் ம. பொ. சி. யின் ஆகஸ்ட் போராட்டத்துக்கு தங்கள் ஆதரவிருக்கும் எனக்கூறிஞர்.

திரு மா. பொ. சி. மேலும் கூறுகையில் இலங்கை தமிழர்களின் பிரதிநிதித்துவம் மிக்க தமிழரசுக்கட்சி மகாநாட்டில் முதன்முறையாகக் கலந்துகொள்வது தமக்கு மிக்க மகிழ்ச்சியை அளிப்பதாகவும் இரண்டரை ஆண்டுகளுக்குப்பின் தாம் மீண்டும் இலங்கை வந்துள்ளதாகவும், பழைய அனுபவங்கள் தமக்கு இன்றும் பசுமையாக நினைவில் இருப்பதாகவும், தெரிவித்தார். (கா. நி.)

''தமிழர்களின் உரிமைகள்

# டி. எஸ். ஸிடமும் டட்லி இடமும் பறிகொடுத்தனர்

## எஸ். டி. பண்டாரநாயக்கா கூறுகிருர்

நல்லூர், திங்கள்

தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் மீண்டும் தமிழ்மக்களை ஏமாற்றுவதற்கு தமிழரசுக்கட்சி முயற்சிக்கிறது. பிரதமர் திரு. டட்லிசேனநாயகாவிற்கு ஆதரவளித்து அதன் மூலம், தமிழ்மக்களின் உரிமைகளை ஒவ்வொன்ருகப் பறிகொடுத்துவிட்ட தமிழரசுக்கட்சி மீண்டும் ஒருதடவை உங்களை ஏமாற்றுவதற்கு முயற்சிக்கிறது.

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடந்த வெகுஜன இயக்கத்தினரின் மாபெரும் கூட்டத்தில் கம்பஹா எம். பி திரு. எஸ். டி. பண்டாரநாயகா பேசும்போது மேற்கண்டவாறு கூறிஞர்.

திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், திரு. பண்டாரநாயகா மேலும் கூறியதாவது:-

காலஞ்சென்ற பிரதமர் திரு. டி எஸ். சேனநாயகாவிடம் தமிழ்கசாங்கிரஸ் தமிழரின் உரிமைகளைப்பறிகொடுத்தது. அதன்பின் திரு. டட்லிசேனநாயகாவிடம் தமிழரசுக்கட்சி உரிமைகளை பறிகொடுத்தது

நாளை தமிழரசுக்கட்சியின் வருடாந்தமகாநாடு ஆரம்பமாகின்றது. இம்மகாநாட்டில் மீண்டும் தமிழர்களை ஏமாற்ற போர்க்குரல்எழுப்பப்போகிருர்கள். அரசாங்கத்துக்கு கொடுத்துவந்த ஆதரவை நிறுத்தப்போகிருேம் என முழங்கப்போகிருர்கள்.

நம்நாட்டின் முப்படைகளும் முதலாளித்துவத்தின் கைப்பொம்மையாக இருக்கின்றனவே தவிர இந்த நாட்டில் வாழும் ஏழை தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களுக்கு பாமிகாப்வி அளிப்பவர்களாயில்லை. 50 லட்சத்துக்கு மேலான ஏழை மக்கள் இந்த நாட்டில் இருப்பதற்கு ஒருஅங்குல நிலதுல் தாமல் அவஸ்தைம்படுகிருர்கள். அரசாங்கம் இன்று ஆளிரம் ஆயிரம் ஏக்கர் நிலத்தை பணத்துடன் பெரிய பெரிய கம்பனிகளுக்கும் முதலாளிகளுக்கும் வழங்கிக்கொண்டிருக்கிறது. ஏழை விவசாயிகளுக்கு அரசாங்கம் கடனுதவி என்ற போர்வையில் உதவிசெய்து விட்டு புயலிஞலோ அன்றி பெரும் மழையிஞலோ சரியான அழிவு ஏற்பட்ட பின்னர் குறித்த தவணையில் அந்தக் கடனை திருப்பிக் கொடுக்க முடியாதுபோனுல் அப்பாவி விவசாயிகளின் கூப்பன்களோடு அவர்களின் குழந்தைகளின் கூப்பன்களையும் பறிமுதல் செய்துவிடுகிறது.

மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நடைபெற்றது.

கட்சியின் புதிய தலைவர் திரு. எம். ராஜமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இந்தமுதற்கூட்டத்தில் கிழக்கிலங்கை உறுப்பினர்கள், முஸ்லிம் உறுப்பினர்கள், வாலிப முன்னணி உறுப்பினர் 90 சத விகிதமான பொதுச்சபை உறுப்பினர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். வடக்கு கிழக்கு மாகாண தமிழரசுக்கட்சி எம். பிக்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டமாகப் பதிலளிக்கையில் தமிழரசுத்தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம்இது ஒரு சிக்கலான பிரச்னையெனவும் அங்குள்ள சிங்களவர் விவசாயப்படை சம்பந்தமாக தாம் பேசியதாகவும் கூறி விவசாயப் படைகளில் தமிழ்மக்கள் அதிக அக்கறை காட்டாததுபற்றிக் குறை தெரிவித்தார்.

செய்தி அச்சுக்குப்போகும் வரை கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. எது வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை,

# கோலாகலமாக மாநாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ்.

மூவர்ணக் கொடிகளாலும், மலர்மாலைகளாலும், மங்கள வாழை தோரணங்களாலும், பச்சை மாவிலை, மூங்கில்களிஞலும் அலங்கரிக்கப்பட்ட உடுவில் திறந்த வெளியரங்கில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் தமிழரசுக்கட்சியின் 11-வது மாநில மாநாடு நேற்றுக்காலை சரியாக 9-45 மணிக்கு கோலாகலமாக ஆரம்பமானது. ஆண்கள், பெண்கள், சிறுவர்களாக நூற்றுக்கணக்கான மக்கள் பந்தலில் திரண்டுநிற்க திரு, எஸ். ஜே வி. செல்வநாயகம் மாநாட்டைக் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்க, வருணபகவானின் சுகந்தமான சூழ்நிலையில் விழாவுக்கு வந்திருந்த பிரமுகர்களையும், எம். பிக்களையும் மாநாடு வரவேற்புக்குழுச் செயலாளரான திரு. எஸ். முத்துலிங்கம் வாசலிலிருந்து வரவேற்று மாநாட்டுஅரங்கிற்குஅழைத்துச் சென்ருர்.

### காந்தி, அண்ணு லிங்கன், நாவலர்

மாநாட்டு பந்தலின் முன்புறத்தில் அறிஞர் அண்ணு, பாரதியார் ஆகியோரும் படங்களும், இரண்டாவது வரிசையில் காந்தி மகான், ஆபிரகாம் லிங்கன் ஆகியோரின் படங்களும், மூன்ருவது வரிசையில் யேசுநாதர், முஸ்லிம் பள்ளிவாசல் படங்களும், அதைஅடுத்து தனி ம யில் ஆறுமுக நாவலர் படமும் தொங்க விடப்பட்டிருந்தன.

மேடையில் ''நம் இனம் காத்த நாவலர்'' என்ற சுலோகத்தின் கீழ் அமரர்களான திருவாளர்கள் கு. வன்னியசிங்கம், எஸ். இராசவரோதயம், கே. ஏகாம்பரம், வி. ஏ கந்தையா ஆகியோரின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன விழா ஆரம்பமானதும் திரு. இராசமாணிக்கம் எம். பி. வன்னியசிங்கத்தின் உருவப்படத்துக்கும், திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி, இராசவரோதயத்தின் உருவப் படத்துக்கும், தந்தை எஸ். ஜே. வி செல்வநாயகம் திரு. ஏகாம்பரத்தின் உருவப் படத்திற்கும் திரு. வி. என். நவரத்தினம் எம். பி திரு. வி. ஏ. கந்தையாவின் உருவப் படத்துக்கும் மலர்மாலையிட்டு மரியாதை செலுத்திஞர்கள்.

### அலங்காரம்

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் மகாநாட்டுக்கென வருகை தந்துள்ளார்கள். இணுவில் சந்தியிலிருந்து மகாநாட்டு அரங்கு வரை சுமார் முக்கால்மைல் நீளமும் இருமருங்கும் வாழைகள், மூங்கில்கள், கமுகுகள், மாவிலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது

மகாநாட்டுப் பந்தல்முன் முகப்பும், கண்காட்சிப் பந்தல் முகப்பும் விசேஷமாகச் சோடனை செய்யப்பட்ட மூவர்ண சிகரத்தால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தமிழரசு எம். பிக்கள் சகலரும் மூவர்ண சால்வை அணிந்து மகாநாட்டுக்கு வந்திருந்தார்கள். (கா. நி.)

# நோய் பரவுகிறது

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவில் குடிதண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுவருவதாலும், குளம், குன்றுகள் கேணிகளில் தண்ணீர்வற்றி வருவதாலும், மாடுகள் மண்டித் தண்ணீரையும், சேற்றுநீரையும் குடிப்பதால் அவற்றிற்கு கழிச்சல் நோய் பரவி வருகின்றது. இதனுல் பல மாடுகள் இறக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகும் என்றபடி இப்பிரச்னைகளை அணுகித் தீர்க்கத்தவ

## தமிழரசு மாநாடு இன்றைய நிகழ்ச்சிகள்

காலை 9 மணி

கொடியேற்றம்

அணிவகுப்பு

தலைமையுரை

தொழிலாளர் மகாநாடு

விவசாய மகாநாடு

மாலை 2.30 மணி

மாதர் மகாநாடு

இலக்கிய மகாநாடு

கவியரங்கு

நாட்டுப் பாடல்

வில்லுப்பாட்டு

நாடகம்

''தமிழர் கதை''

# திறைசேரி சுற்றுநிருபம் பயங்கரமானதாம்

கண்டி, திங்கள்

'சமீபத்தில் வெளியான திறைசேரிச் சுற்றுநிருபம் பயங்கரமானதும் சிங்கள மக்களுக்கு தீங்கு விளைவிக்கத்தக்கதுமாகும்' என வெலியம்பேயில் நடைபெற்ற கூட்டணிக்கட்சிகளின் பிரசாரக்கூட்டத்தில் பேசிய திரு. ரி. பி. இலங்கரத்திஞ கூறிஞர்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

சில சிறிய வேற்றுமைகள் காரணமாக சோஷலிசக் கட்சிகள் பிளவுபட்டிருப்பின் நாடு கஷ்டமுறுவதோடு முதலாளித்துவ வர்க்கத்தினர் நன்மையடைவர். வேற்றுமைகளை கூட்டணிக்கட்சியினர் நீக்கிவிட்டு ஒற்றுமையுடன் செயலாற்றிஞல் தான் அடுத்த தேர்தலில் வெற்றி பெறலாம். கூட்டணியோடு எல்லா சோஷலிச கட்சியினரும் உண்மையான சோஷலிச அரசாங்கத்தை உருவாக்க ஒன்று சேரவேண்டும்.

இக்கூட்டத்தில் பதுளை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. பி. எச். கண்டாரா பேசுகையில், கண்டிப்பகுதியில் இலங்கைப் பிரஜைகளல்லாதோர் கைத்தொழில்களை நிறுவுவதும் நிறுவ முயற்சிப்பதும் நாட்டில் பயங்கரமான ஒரு நிலையை உருவாக்கிறதெனவும் இதனுல் காலகதியில் கண்டிப்பகுதி இலங்கையர் அல்லாதோரைக் கொண்ட பகுதியாக மாறிவிடும். அத்துடன் இவர்களின் அடிமைகளாகவே நமது வருங்கால சந்ததியினர் வாழவேண்டிய நிலைமையேற்படும் எனக் கூறிஞர். சென்ற பொதுத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனவும் குறை கூறிஞர்.

த்தி செய்வதன் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து எமது பகுதி வாலிபர்களுக்கு தொழில் பெறும் வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்ய வேண்டும். (கா. நி)

கம் தரப்பட்டிருந்தது. அடிக்கல் நாட்டியவர் கிராமாபிவிருத்தி சிறுகைத்தொழில் உதவி அதிபர் திரு. எஸ். கந்தவனம் என்றிருகக வேண்டும்.

# வாகனங்களை நிறுத்தி பொலிஸார் சோதனை

## முள்வேலிகள் பலப்படுத்தப்பட்டன

யாழ்ப்பாணம், திங்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவில் மூன்று வாசல்களையும், ஆலய பரிபாலனசபையினர் நேற்றுக்காலை முட்கம்பிகளால் அடைத்தனர். கோவிலைச் சுற்றியுள்ள மற்றும் முட்கம்பி வேலிகளும் நேற்றுப் பலப்படுத்தப்பட்டுள்ளன.

நேக்றுக்காலைமுதல் கோவிலுக்கு அருகிலுள்ள ரோட்டிஞல வந்த வாகனங்களை பொலிசார் மறித்துச் சோதனை செய்தனர். பஸ்கள் மட்டும் சோதனையிடப்படவிலலை. பஸ்ஸில் வந்து கோவிலடியில் இறங்குவோரும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

நேற்று நண்பகல முதல மட்டுவில் பகுதியில் பொலிஸார் அதிகரிக்கப்பட்ள்ளனர். பொலிஸ் ஜீப் வண்டிகளில் பொலிஸார் மட்டுவில் பகுதிகளில் ரோந்து சுற்றிவருகின்றனர்.

கோவிலடிக்குச் செல்லும் சகல வாகனங்களும், பொலிஸாரால் சோதனையிடப்படுமென்றும், சந்தேகத்திற்கிடமானவர்கள் கைதுசெய்யப்படுவார்களென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுககாலை பொலிஸ் கோஷ்டியொன்று, மட்டுவில் பகுதியில் சில வீடுகளையும் ஒரு கடையையும் சோதனை செய்ததாக பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

கைக்குண்டு வீச்சு சம்பவத்தையொட்டி பொலிஸாரால் தேடப்பட்டு வரும் கதிரன் செல்லக்கிளி என்ற இளம்பெண் நேற்று முன்தினமிரவு மட்டுவிலுக்கு வந்திருப்பதாகவும் மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருப்பதாகவும் பொலிசாருக்குத் தகவல் கிடைத்திருப்பதாக தெரியவருகிறது.

செல்லக்கிளியை எங்கு கண்டாலும் கைது செய்யும்படி சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. துரைசிங்கம் பொலிசாருக்கு உத்தரவிட்டிருப்பதாக அறியப்படுகிறது.

நேற்று முன்தினம் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவிடம் சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. துரைசிங்கம் கடந்த திங்கட்கிழமை நடந்த சம்பவங்களை விளக்கிக் கூறிஞர்.

பொங்கலுக்கு தண்ணீர் வழங்கும் பொறுப்பை காரியாதிகாரி தலைமயில் உள்ள குழு ஏற்றதாகவும் அக்குழு ஏன் தண்ணீர் வழங்கவில்லையென்றும் திரு. பண்டாரநாயக்கா கேட்ட பொழுது வழக்கம்போல் பொங்கல் உற்சவம் நடைபெருததால் தண்ணீர் வழங்கப்படவில்லையென திரு. துரைசிங்கம் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் கூட்டிய மகாநாட்டில் நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை கோவில் மூடப்பட்டு பூசைகளும் நிறுத்தப்பட வேண்டுமென திரு. எஸ். என். ரி. நாகரத்தினம் கோரியதாகவும், அவரின் கோரிக்கையை கோவில் பரிபாலன குழுவினர் நிறைவேற்றியதாகவும் கம்பஹா எம் பி. யிடம் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# விவசாயக்கழகம்

புத்தளம், செவ்.

பள்ளிவாசல் துறையில் உள்ள வாலிபர்கள் ஒன்று சேர்ந்து ''ஜின்ஞ'' இளைஞர் விவசாயக் கழகம் ஒன்றை அமைத்துள்ளனர். இக் கூட்டத்தில் விவசாய மேற்பார்வையாளர்களாகிய செல்விகள் ஆர். எவ். ரி. மரியாம்பிள்ளை, நஜிமா உம்மா முகமது இஸ்மெயில் இருவரும், விவசாம் பற்றி விரிவாக எடுத்துக் கூறினர். பின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு நடைபெற்றது.

தலைவர்: செல்வன் எஸ். எம். நூர்தஹறா, செயலாளர் எஸ். எம். சாலிகு, வஞதிகாரி: எஸ். செய்கு அலாவுதீன் பன்னிரண்டு பேர் கொண்ட விசேஷ கமிட்டி என்றும்நிறுவப்பட்டது போஷகர்களாக கல்பிட்டி கிராமசபைத் தலைவர் ஜனுப் எஸ். எம். ஏ. றசீட் ஜனுப்கள் எஸ். எம். சேகுசதக்கு என். சுலைமார். ஏ. எம். முஹமதீன், பக்கீர், எல். கே. அலாவுதீன், ஆகியோர் நியமிக்கம்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பிட்டி வட்டார விளையாட்டு போட்டி

புத்தளம், திங்கள் கற்பிட்டி வட்டார பாடசாலைகள் - கழகங்கள் ஆகியவற்றுக்கான விளையாட்டுப் போட்டி தாளையடி மைதானத்தில் கொண்டாடப்பட்டது. பல பாடசாலைகளும் கழகங்களும் இதில் கலந்து கொண்டன.

போட்டியில் அல்-அக்சா 40 புள்ளிகளைனம் தழுவ சந்த அந்தோனிய 38 புள்ளிகளையும் பெற்று 1-ம்2-ம் இடங்களைப் பெற்றன. தழுவ சாந்த அந்தோனியா கழகத்தைச் சேர்ந்த செல்வன் சீ. எம். எல்மெரில்சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உத்தியோகஸ்தர்களுக்கும் கிராம சேவையாளர்களுக்குமிடையேயும் போட்டிகள் நடைபெற்றன. விசேட அதிதியாய்க் கலந்து கொண்ட முன்னாள் சபாநாயகர் ஜனாப் எச்.எஸ். இஸ்மெயில் வெற்றியீட்டியவர்களுக்கு சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கினார். அரசாங்கத்திடமிருந்து தங்களுக்கு ஒரு விளையாட்டு மைதானமும் உபகரணமும் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்ட போது ஜனாப் இஸ்மெயில் சகலதிற்கும் அரசாங்கத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது நல்லதல்ல என்றும் நாம் நமது சுயதேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் கூறினார். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் வாலிபர்கள் ஒன்று சேர்ந்து சிரமதான முறைப்படி விளையாட்டு மைதானத்தை உண்டாக்குவது நல்லது என்று கூறினார் அவர்.

கற்பிட்டி மாவட்ட விளையாட்டுப் போதனாசிரியர் திரு. எஸ். மரியதாஸ், விளையாட்டுப் போட்டியை மாவட்ட அதிகாரி திரு. ஜே. எஸ். குணரத்தினம் ஆகியோர் விழாவை சிறப்பாக நடத்தி முடித்தனர்.

## உடற்பயிற்சி

திருகோணமலை, திங்கள் சங்கீதத்துக்கு ஏற்றவாறு உடற்பயிற்சிகளைச் செய்யும் திறமைப் போட்டியில் இங்குள்ள பாடசாலை மாணவிகள் பங்கு பற்றினர். இப்போட்டியில் முதலாவது இடத்தை ஸ்ரீ சண்முக வித்தியாலயமும் இரண்டாவது இடத்தைமெதடிஸ்த மிஷன் பாடசாலையும் மூன்றாவது இடத்தை அர்ச். மேரி கொன்வென்ரும் பெற்றுள்ளன.

## வெற்றிபெற்ற பாடசாலைகள்

ஊர்காவற்றுறை, திங். தீவுப்பகுதி பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டியில் கரம்பொன் சிறிய புஷ்ப மகாவித்தியாலயம் 'ஏ' பிரிவில் முதலிடத்தையும், 'பி' பிரிவில் பெண்கள் பாடசாலைகளில் ஊர்காவற்றுறை புனித மேரி பாடசாலை முதலிடத்தையும் ஆண்கள் பாடசாலைகளில் புங்குடுதீவு றோ. க. க. பாடசாலை முதலிடத்தையும் பெற்றன.

## றண்ணிங் கோசஸ் மனோகரா வெற்றி

பருத்தித்துறை, திங்கள் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக்கழக ஆதரவில் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வல்வை றண்ணிங் கோசஸ் கோஷ்டியும், கரவை செவிண் லயன்ஸ் கோஷ்டியும் மோதிக் கொண்டபோது றண்ணிங் கோசஸ் 5-3 கோல்களால் வெற்றியீட்டியது திரு.எஸ். போல் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இதே சுற்றுப் போட்டியில் அல்வாய் மனோகராவும், வல்வை ஒற்றுமைக் கோஷ்டியும் மோதிக்கொண்டதில் மனோகரா 2-1 கோல்களால் வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக திரு. சி சர்வேஸ்வரன் கடமையாற்றினார்.

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
வாலிப விருந்து

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m
Poya, PrePoya 10-30 A.M.
Kazgaras - Steward Granger
Gabriellalicudi

ராஜா 86வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

பருத்தித்துறை, திங்கள் நெலலியடி ஸ்பேஸ் விளையாட்டுக்கழக ஆதரவில் தற்பொழுது நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாதம் 16-ம் திகதி முடிவடைகிறது. வெற்றிபெறும் கோஷ்டிகளுக்கு செனட்டர் நீதிராசா வெற்றிக்கேடயம் வழங்குவார்.

## புதுவருட விளையாட்டுப் போட்டி

ஊர்காவற்றுறை, திங். எதிர்வரும் புத்தாண்டையொட்டி புங்குடுதீவு சிவலைப்பிட்டி சன சமூக நிலையத்தினர் மாபெரும் விளையாட்டுப் போட்டியை நடாத்தத் தீர்மானித்துள்ளனர்.

நீண்டதூர சைக்கிள் ஓட்டப் போட்டி விளையாட்டுக்களில் பிரதான இடம்வகிக்கும். ஊர்காவற்றுறைப் பொலிஸ்அதிகாரி விளையாட்டுப்போட்டியை ஆரம்பித்து வைப்பார்.

## கரபந்தாட்டப் போட்டி

ஊர்காவற்றுறை, திங். 'லைடன்' வெற்றிக் கிண்ணத்திற்கான கரபந்தாட்டப் போட்டியில் காரைநகர் மாலு மீன் விளையாட்டுக் கோஷ்டியும், ஊர்காவற்றுறை சனசமூக நிலையக கோஷ்டியும் கலந்துகொண்டன.

ஊர்காவற்றுறை சனசமூக நிலையக் கோஷ்டி இரு ஆட்டங்களில் வெற்றிபெற்றது

## நகைகளை பறிக்கிறார்களாம

முல்லைத்தீவு, திங்கள் இரவுவேளையில் சினிமாப் படம் பார்த்துவிட்டுத்திரும்பும் பெண்களிடம் நகைகளைச் சூறையாடுவதில் சில வாலிபர்கள் இப்பகுதியில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சமீபத்தில் இங்கு நடைபெற்ற இப்படியான சம்பவத்தில் சிக்குண்ட ஒரு பெண்மணி வாலிபரின் பெயரைக்கூட வெளிப்படுத்தப் பயப்படுகிறாராம்.

இதுசம்பந்தமான புலன் விசாரணைகளில் முல்லைத்தீவு பொலிசார் அக்கறைகாட்ட வேண்டுமென பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை ஒலிபரப்புக்

# செய்திச் சுருக்கம்

### நீர் விநியோகத்திற்கு 4 லட்சம் ரூபா

நாவலப்பிட்டிபகுதி குடிதண்ணீர் விநியோகத்திட்டத்திற்கு அரசாங்கத்திடமிருந்து 4 லட்சம் ரூபா வழங்கப்படவிருக்கிறது. சமீபத்தில் நாவலப்பிட்டிக்கு விஜயஞ் செய்திருந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் நாவலப்பிட்டி நகரசபையினர் குடிதண்ணீர் விநியோகத்திற்கு உதவுமாறு உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்டுக்கொண்ட தற்கிணங்க புதிய குடிநீர் விநியோகத் திட்டத்திற்காக 4 லட்சம் ரூபாவை அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கு அங்கீகாரமளித்துள்ளார்.

0 0 0

### தட்டுப்பாட்டை நீக்குக

பொத்துவில், பட்டிருப்பு, கல்முனை, நிந்தாவூர் ஆகிய தொகுதிகளுக்கு பொதுவாக உள்ள கல்முனை வைத்திய சாலையில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இதுகுறித்து பொத்துவில் எம். பி. ஜனாப் ஏ. அப்துல் மஜீத் சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகாவுக்கு அவசரத் தந்தியொன்று அனுப்பியுள்ளார். வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை விரைவில் நீக்கவேண்டுமென ஜனாப் ஏ. அப்துல் மஜீத் தந்தியில் கோரியுள்ளார்.

0 0 0

### மொழிபெயர்ப்பாளருக்கு கௌரவம்

திருக்கோணமலை நகரசபை திருவள்ளுவர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது. இவ்விழாவில் குறளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்த சிங்களப் பெண்மணியையும் பௌத்த குருவையும் நகரசபை கௌரவிக்கவுள்ளது. திருமலை நகரசபை திருவள்ளுவர் தினத்தையொட்டி முத்திரையொன்றை வெளியிடுமாறு அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

0 0 0

### 'பியூஜி' கொழும்பு வந்துள்ளது

முதலாவது ஜப்பானிய தென்துருவ ஆராய்ச்சிக் கப்பலான 'பியூஜி' ஒன்பதாவது ஆராய்ச்சிப் பயணத்தை முடித்துக்கொண்டுதாய்நாடு திரும்பும் வழியில் கொழும்புத் துறைமுகத்துக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ளது. சனிக்கிழமையன்று துறைமுகத்தை கப்பல் அடைந்த பின்னர் பத்திரிகையாளர் மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டில் பேசிய கப்பல் தலைவர் திரு. மட்சூசிமா 'பியூஜி' தனது பயணத்தின்போது 20,000 மைல்கள் சென்றுள்ளதுஎனவும் 140 நாட்களுக்குப் பிரயாணம் செய்திருக்கிறதெனவும் தெரிவித்தார்.

0 0 0

### திருத்தப்பட்டது

புகையிரதங்களில் உணவு வழங்கப்படும் சேவையை புகையிரதப்பகுதி கையேற்ற பின்னர் அனுராதபுர உணவுசாலை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. போக்கு வரத்து அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருள்ள இம்மாதம் 8-ந் தேதி காலை இந்த திருத்தியமைக்கப்பட்ட உணவு சாலையைத் திறந்து வைப்பார்.

0 0 0

### புதுவருடத்துக்கு உணவுப் பொருட்கள்

கூடுதலான உப உணவுப் பொருட்களை தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு மக்களுக்கு விநியோகிக்க அரசாங்கம் ஒழுங்குகள் செய்துள்ளது. இதன் முதற்படியாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு அனுராதபுரம் உணவுக் கட்டுப்பாட்டுக்காரியாலயம் அனுப்பிய அறிக்கையில் எல்லாப் பண்டசசாலைகளுக்கும் 20 சதவீதம் அதிகமான உபஉணவுப் பொருட்களை வழங்குமாறு கேட்டுள்ளது.

0 0 0

### அபிவிருத்திக்கு ஜப்பான் உதவி

இலங்கையின் வரண்ட பிரதேசங்களில் விவசாயத்தை மாற்றியமைத்து விவசாயத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் ஜப்பான் நாட்டின் உதவியை நாடியுள்ளது. இதற்கான உடன்பாடு ஒன்று ஜப்பான்-இலங்கை நாடுகளிடையே ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் இலங்கைக்கு வந்திருந்த ஜப்பானிய நிபுணர்கள் வரண்டபகுதி விவசாயம்பற்றி ஆராய்ந்து விட்டுச்சென்றனர். இரண்டொரு மாதங்களில் இரு நாடுகளுக்குமிடையில் இது சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படுமென நம்பப்படுகிறது.

# ஒன்றைய

## பட்டினசபை தீர்மானம்

சுழிபுரம், திங்கள் பண்டத்தரிப்பு கிராம வைத்திய சாலையில் கடமையாற்றும் அப்போதிக்கரியை வேறு வைத்திய சாலைக்குபதில் அப்போதிக்கரியாக அனுப்பும் முறையை மாற்றிதொடர்ந்து பண்டத்தரிப்பு கிராமவைத்திய சாலையில் கடமையாற்றச் செய்யுமாறு யாழ்ப்பாண சுகாதார சேவை அத்தியட்சகரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை பட்டினசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட சபைத் தலைவர். ஆர். செல்வரத்தினம். கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

......

## வவனியாவுக்கு அமைச்சர் விஜய

வவனியா திங்கள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா வவனியாவில் புதிதாகக் கட்டப்பட்ட நகரசபைக் கட்டடத்தை இம்மாதம் திறந்து வைப்பதற்காக இங்கு விஜயம்செய்யவிருக்கிறார். இதன் பின்னர் அமைச்சர் வவனியா திறந்த வெளியரங்கில் நடைபெறும் ஒரு பொதுக்கூட்டத்திலும் கலந்து சொற்பொழிவாற்றுவார். இங்கு வரும் அமைச்சருக்கு ஒரு பொதுவரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

......

## பஸ் நிலையத்தில் 100 பேர் கைது

வவனியா, திங்கள் வவனியா பொலிசார் வவனியா பஸ் நிலையத்தில் இரவு வேளையில் இருந்த சுமார் 100 பேரைநேற்றிரவு கைது செய்து விசாரணை செய்தனர்.

50 பேர் விடுதலை செய்யப்பட்டனர். சந்தேகத்துக்கிடமாக நடந்து கொண்டார்களெனக் கருதப்படும் மீகுதி 50 பேரும் தொடர்ந்து விசாரிக்கப்படுகின்றன.

## பதவி உயர்வு

வவனியா, திங்கள் வவனியா கச்சேரியில் பிரதம சிறுப்பராக கடமையாற்றிய திரு. எம். எ. முருகேசு தரம் உயர்த்தப்பட்டு கொழும்பு பெரிய கந்தோருக்கு பிரதம சிறுப்பராக இடமாற்றம் பெற்றுள்ளார்

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், செவ். வண்ணை வாலாம்பிகை

## அறிவித்தல்

**யாழ்ப்பாண மாநகரசபை**

**அபாயகரமானதும் தீங்கானதுமான வியாபார தொழில் அனுமதிச்சீட்டுக் கட்டணங்கள்- 1969**

9-2-68.ந்திகதிய 14788ம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 21-6-68-ந்திகதிய 14807-ம் இலக்க வர்த்தமானியில் விபரிக்கப்பட்டதும், 16-8-68-ந்திகதிய 14815-ம் இலக்க வர்த்தமானியில் திருத்தப்பட்டதுமான மேற்படி வியாபாரங்களை, தொழில்களை நடாத்துவதற்கான அனுமதிச்சீட்டுக் கட்டணங்களை, 1969 சித்திரை மாதம் 21-ந் திகதிக்கு முன்னதாக மாநகரசபைஅலுவலகத்தில் செலுத்தி, அனுமதிச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்குறிப்பிட்ட திகதிக்குப்பின் சீட்டுப்பெறுதோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 7-4-69.
1508

## கேள்வி விளம்பரம்

**கிளிநொச்சிப் பட்டினசபை**

**கிளிநொச்சி சந்தையில் மாட்டிறைச்சிக் கடை இல. 1 விற்பனை உரிமை காலம் 1-5-69 தொடக்கம் 31-12-69 வரை.**

மேற்குறிப்பிட்ட காலத்திற்கு கிளிநொச்சிச் சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடை இல.1க்கு அரக்குமுத்திரையிட்ட கேள்விகள்என்னால் 15-4-69-ந் திகதி முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் இச்சபைக் காரியாலயத்தில் கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 50-ம் பத்திரப்பணமாக ரூபா 5-ம் செலுத்தி 14-4-1969-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். பத்திரப்பணம் ரூபா 5.-ம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது

இக்கேள்வி பற்றிய சகல விபரங்களையும் இச்சபைக் காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்
க. ச. கந்தையா,
தலைவர்.

பட்டினசபை அலுவலகம்,
கிளிநொசசி,
3-4-69 1506

# வரி விளம்பரம்

## கல்வி

காலை, மாலை வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஜீ சீ. ஈ. சாதாரணம் கலை/ விஞ்ஞானம்/ வர்த்தகம், மனையியல். ஜீ. சீ. ஈ. உயர்தரம் கலை வர்த்தகம், ஜீ. ஏ. கியூ. சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம். விசேஷ ஆங்கிலம், சிங்களம். விடுதி வசதி உண்டு. தாமதிக்காது விண்ணப்பிக்கவும். ஏப்பிரல் 18ம் திகதி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. யூனைடெட் மகளிர் கல்லூரி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 909

1969-ம் ஆண்டுக்குரிய க. பொ. த. சாதாரண உயர்தர பரீட்சைகளுக்கு வர்த்தக, கலை, விஞ்ஞான ஆங்கில சிங்கள தையல் வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாருக்கும் விடுதி வசதியுண்டு. வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 1924-ல் ஆரம்பிக்கப்பட்டது 920

## விற்பனைக்கு

காணி: யாழ்ப்பாண முனிசிப்பல் எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு பொருத்தமானது. திருநெல்வேலி உபதபால் கந்தோரின் இடப்பக்கத்து ஒழுங்கைக்குப் பக்கத்தில் உள்ள நிலம். விபரங்களுக்கு: செ. நாகலிங்கம், பள்ளிக்கூட வளவு, சுதுமலை வடக்கு, மானிப்பாய். 802

முட்டை இடும் கறுப்புக் கோழிகள் Ex. Nel Farm, மற்றும் ஒரு மாதச் சேவற் குஞ்சுகளும் பேட்டுக் குஞ்சுகளும் உடனடியாக விற்பனைக்குண்டு. பிரணவப் பண்ணை, கந்தரோடைவீதி, சுன்னாகம். 910

## தேவை

வெல்டர்- (காஸ்-எலெக்றிக்) கிறுங்சாவ்ற் நிரப்புதல், மெற்றல், ஈயம் வைத்தல் முதலிய வேலைகளில் அனுபவம் வாய்ந்தவர் விண்ணப்பிக்கவும். யந்திரம்ஸ், 48, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 917

யாழ்ப்பாணம் வண்ணை-நாவலர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனேஜர் ஒருவர் தேவை. 1000ரூபா ரொக்கப்பணமும்5000ரூபா ஆதனமும் பிணை கட்டக்கூடியவராயும், கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m.
Poya, PrePoya 10-30 A.M.
Kazgaras - Steward Granger
Gabriellalicudi
in
THE LAST SAFARI

இனுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30க்கு மட்டும்
சிவாஜி—சௌகார் ஜானகி
நடித்த
மோட்டார் சுந்தரம்பிள்ளை
4-15க்கு மாத்திரம்
John Wyne Robert Michin
in
ELDORADO

...டதில் மனோகரா 2-1 கோல் கணக்கில் வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக திரு. சி. சர்வேஸ்வரன் கடமையாற்றினர்.

ராஜா 86வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாநர்கள்
அரைக்கட்டணத்துடன்
அனுமதிக்கப்படுவர்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - கே. ஆர். விஜயா
நடித்த
பணம்
படைத்தவன்


புத்தாண்டு திரை விருந்து !!!
கிங்ஸ்லி-மைலன், (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன், (யாழ். நகர்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில்




கலைப்பேரரசர் எம். ஜி. ஆர்.
ஆடலழகி ஜெயலலிதா
எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
சரவணா பிலிம்ஸ்
சந்திரோதயம்
டைரக்ஷன்: கே. சங்கர்

4-வது வெற்றி வாரம் !
கெப்பிட்டல் (கொழும்பு)
முத்துராமன், ராஜன், பாரதி, பானுமதி
நடித்த
பூவும் பொட்டும்


விசாரணைகளில் முல்லைத்தீவு பொலிசார் அக்கறைகாட்ட வேண்டுமென பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 8—4—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-30 கானமஞ்சரி, 6-45 புதுமொழி படைப்போம், 6-55 வாத்தியஇசை, 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பாட்டு --சகுந்தலா சிவராசா, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30வானொலி சஞ்சிகை, 10-00 தேர்ந்த இசை.

## நீதிபதி இடமாற்றம்

காங்கேசன்துறை, திங்.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் இம்மாதத்துடன் ஹட்டன் மாஜிஸ்திரேட்கோர்ட்டிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
PrePoya Poya 10-30 A.M.
SPY SMASHER
( erial சீரியல்)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, & 9-45
Jay Mukerji
Asha Prackh
in
LOVE IN TOKYO
(HINDI)


## 'பியூஜி' கொழும்பு வந்துள்ளது

முதலாவது ஜப்பானிய தென்துருவ ஆராய்ச்சிக் கப்பலான 'பியூஜி' என்பதாவது ஆராய்ச்சிப் பயணத்...

## இன்றைய பலன்

8-4-69

பங்குனி மீ 26-ம் உ

செவ்வாய்க்கிழமை

திதி- சஷ்டி பகல் 1-24 மேல் சப்தமி.

நட்சத்திரம்- மூலம் இரவு 12-01 மேல் பூராடம்.

ராகுகாலம்- 3-07 4-37.

சுபநேரம்- 10-37 - 12-07.

இன்று பிறந்தவர்களுக்கு- அரசியல் வாதிகளுக்கு அமைதி தரும் நல்லாண்டாகும். உயர் கல்வி பயில்வோருக்கு சித்தியும், தம்பதிகளுக்கு தரமான வாழ்வும், தன் தொழில் புரிவோர்க்கு தனச்சிறப்பும் உத்தியோகத்தர்களுக்கு மத்திம பலனைத் தரும் ஆண்டாகும்.

மேஷம்- உள்ளக் கிளர்ச்சி, உறவாடும்நிலை.

ரிஷபம்- ஆசாரக் குறைவு, அமைதிக்கு பங்கம்.

மிதுனம்- கன்னியர் உறவு, மின்னிடும் காதல்.

கடகம்- வியாபாரக் குறைவு, மூலதனம் கரையும்.

சிம்மம்- பரம்பொருள் நினைவு, பரிசில் நாட்டம்.

கன்னி- உத்தியோக விருத்தி, ஊக்கமிகுதி.

துலாம்- பணவரவு, பத்துக்கள் உறவு.

விருச்சிகம்- கடன் தொல்லை, கட்டுப்பாடு வேண்டும்.

தனுசு- கன்னல் வீசும் பார்வை கவனித்துநட.

மகரம்-பேச்சில்வெற்றி நலன்தரும் வாழ்வு.

கும்பம்- சரிந்துவிடும் மனக்கோட்டை, பிரிந்துவிடும் அமைதி.

மீனம்- தரமானவாழ்வு தனமும் சேரும்.

—சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

...சமீபத்தில் இலங்கைக்கு வந்திருந்த ஜப்பானிய நிபுணர்கள் வரண்டபகுதி விவசாயம்பற்றி ஆராய்ந்து விட்டுச்சென்றனர். இரண்டொரு மாதங்களில் இரு நாடுகளுக்குமிடையில் இது சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும் என நம்பப்படுகிறது. பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா ஜப்பானுக்குச் சென்றிருந்த போது ஜப்பானிய பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே இவ்வொப்பந்தம் உருவாகியுள்ளதெனத்தெரிகிறது.

யாழ்ப்பாண [illegible] முருகேசு தரம் உயர்த்தப்பட்டு மிகவும் பெரிய சுந்தோருக்கு பிரதம சிறப்பாராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் மகோற்சவ காலத்தில் தினமும் மாலை வேளையில் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கடந்த 24-ம் திகதி ஆரம்பமான உற்சவம் இம்மாதம் 4-ம் திகதி முடிவடைந்தது.

# மட்டக்களப்புச் செய்திகள்

### மழை

நீண்டகால வரட்சிக்குப் பின் சனிக்கிழமை முதல் இங்கு மழைபெய்து வருகின்றது. தொடர்ந்து மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

### கால் நடைகளைப் பதியவும்

மட்டக்களப்பு பாவட்டத்திலுள்ள கால் நடைச்சொந்தக்காரர்கள் தம்வசமுள்ள கால்நடைகளைக் காரியாதிகாரி அலுவலகங்களில் ஏப்ரல் மாதம் 30-ம் திகதிக்கிடையில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அறிவித்திருக்கின்றார்.

தமிழ் திரைப்பட இறக்குமதியின் வெட்டுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக மட்டக்களப்பு மாநகரசபையின் விசேட கூட்டமொன்று விரைவில் நடைபெற விருப்பதாக அங்கத்தவர் ஒருவர் தெரிவிக்கிறார்.

### நாடகவிழா

மட்டக்களப்பு தேனமுத இலக்கிய மன்ற நாடகவிழா இம்மாதம் 15-ம் திகதி நகர சபை மண்டபத்தில் நடைபெறும்.

### ரூபா 10 ஆயிரம் ஒதுக்கீடு

மட்டக்களப்பு நகர மத்தியில் உள்ள கோட்டை முனைப்பாலத்துக்கும் கல்லடிப் பாலத்திற்கும் மின் விளக்கு அலங்காரம் செய்ய மட்டக்களப்பு மாநகரசபை 10 ஆயிரம் ரூபா ஒதுக்கியுள்ளது

### பாலம் அமைக்கப்படும்

மட்டக்களப்பு - திருக்கோணமலை கரையோர மார்க்கத்திலுள்ள பனிச்சங்கேணித்துறைக்கு பிரமாண்டமான பாலம் ஒன்று நிறுவப்படவிருக்கின்றது. இதற்கான அத்திபாரக்கல்லை பொது மராமத்து மந்திரி திரு. மொண்டேகுஜெயவிக்கிரமா ஏப்ரல் 23-ம் திகதி நாட்டிவைப்பார்.

### தமிழரசுக்கட்சி கவனத்திற்கு கொண்டுவரப்படும்

தமிழரசுக்கட்சி கிழக்கு மாகாண அபிவிருத்திவேலைகளில் பொதுவாக போதிய அக்கறை காட்டவேண்டும். என்று அக்கட்சியின் உடுவில் மாநாட்டில் வற்புறுத்தப்பட விருக்கின்றது

தமிழரசுக்கட்சியின் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் இதனை வற்புறுத்துவார்கள், என்றும் தமிழ் பிரதேசத்தில் கிழக்குமாகாணம் பல துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டிருப்பதை அரசாங்கத்துக்குச் சுட்டிக் காட்டப்படவேண்டும் என்று இதில் எடுத்துக் கூறப்படவிருக்கிறது.

— —

## போட்டியிடுவாராம்

ஊர்காவற்றுறை, திங்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தீவுப்பகுதித் தொகுதியில் புங்குடுதீவைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. பி. கதிரவேலு ஓர் அபேட்சகராகப் போட்டியிடுவாரெனத் தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் அபேட்சகராய் இவர் பெரும்பாலும் போட்டியிடக்கூடுமெனக் கூறப்படுகிறது.

......

## உத்தரவின்றி விற்றூர்களாம்

முல்லைத்தீவு, திங்கள்

முள்ளிவாய்க்காலில் உத்தரவின்றிக் கள்வியபாரம் செய்தவர்களை முள்ளிவாய்க்கால் கிராமசேவையாளர் திரு. ச. பாலசிங்கம் கைது செய்து முல்லைத்தீவுப் பொலிசில் ஒப்படைத்துள்ளார்.

விபரங்களையும் இச்சபைக் காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்
க. ச. கந்தையா,
தலைவர்.

பட்டினசபை அலுவலகம்,
கிளிநொச்சி,
3-4-69. 1506

## கேள்வி விளம்பரம்

1. 3-ம், 4-ம் வட்டார எல்லை ஒழுங்கைத் திருத்தம்.

மேற்குறிப்பிட்ட வேலைக்குச் சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் அச்சுவேலிக் கிராமசபைத் தலைவரால் 19-4-69-ந் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு கேள்விக்கும் கேள்விப் பிணைப் பணம் ரூபா 25/-ம், பத்திரப் பணம் ரூபா 5-ம் கட்டிய தன் பேரில் 18-4-69-ந் திகதி வெள்ளிக்கிழமை நண் பகல் 12 மணி வரையுமே கேள்விப்பத்திரங்கள் வழங்க படும்.

ஏனைய விபரங்களைக் கிராமசபைக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

சி. த. சபாரத்தினம் ஜே. பி.,
தலைவர்,
கி. ச. அச்சுவேலி

கிராமசபைக் கந்தோர்,
அச்சுவேலி,
5-4-69 1507

## 370 இரு ·கஞ்சா பிடிபட்டது

வவுனியா, திங்கள்

370 கிறாம் கஞ்சா வைத்திருந்ததாக எச். பி. புச்சி பாண்டா என்பவருக்கு எதிராக வவுனியா பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே, வவுனியா நீதிபதி எதிரிக்கு 60 ரூபா அபராதம் விதித்தார். வவுனியா பொலிசைச் சேர்ந்த சமத்துபாலா செனிவறட்ன ஆகியோர் இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

## பதவி மாற்றம்

வவுனியா, திங்கள்

வவுனியாக் கச்சேரியில் சமூக சேவைப்பகுதி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. விஜயரத்தினம் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் விநியோக உத்தியோகத்தரராகக் கடமையேற்றுள்ளார்.

ரமஸ், 48, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 917

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனேஜர் ஒருவர் தேவை. 1000ரூபா ரொக்கப்பணமும் 5000ரூபா ஆதனமும் பிணை கட்டக் கூடியவராயும், கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராயும் 25-40 வயதுடையவராயும் உள்ளவர்கள் அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்கள் மூன்றுடன் பதிவுக் கடிதமூலம் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கலாம். 914

## விவசாய மன்னருக்கு பாராட்டு

வவுனியா, திங்கள்

வவுனியாவில் நடக்கவிருக்கும் புதுவருட விளையாட்டுப் போட்டியில் வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடம் தெரிவான விவசாய மன்னர்கள் அனைவரையும் கௌரவிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. சகல காரியாதிகாரி பகுதிகளிலும் முதலாவதாக வந்தவர்களுக்கு புதுவருடப்பிறப்பு விழாவில் பல பரிசுகளும் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

— —

## விசேஷ பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், செவ்.

தமிழரசுக் கட்சி மாநாட்டை முன்னிட்டு, இணுவிலில் அமைக்கப் பட்டிருந்த விசேஷ பொலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் திரு. ஜேக்கப் தலைமையில் சுமார் 60 பொலிஸார் கடமையாற்றுகிறார்கள்.

(கா. நி)

— —

## மேலதிக வேலை செய்ய மறுப்பு

காங்கேசன்துறை, திங்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் போனஸ் சம்பள விகித தரப் பிரச்னை காரணமாக தொழிலாளர்கள் 'ஓவர்டைம் வேலை செய்ய மறுத்துள்ளனராம் நேற்றைய தினம் இயந்திரப்பகுதி தொழிலாளர இந்த வேலை மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டனர் என்றும், இதைத் தொடர்ந்து சகல பகுதி தொழிலாளர்களும் மேலதிக நேர வேலை செய்வதற்கு மறுத்து நிற்க விருப்பதாக தெரிய வருகிறது.

இது சம்பந்தமாக ஆராய கொழும்பிலிருந்து நாளை சீமெந்துக் கூட்டுத்தாபன உயர்தர அதிகாரிகள் காங்கேசன்துறைக்கு வரவிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெருசலத்தில் அரபு கொமாண்டோ தாக்குதல்

## பலத்தசேதம் விளைவித்ததாக அறிக்கை

அம்மான், ஏப் 7

அரபு கொமாண்டோ படையினர் நேற்று ஜெருசலம் நகர் மீது நடத்திய ஒரு தாக்குதலில் பலத்த சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இஸ்ரேலியரின் ஒருபெரிய கட்டிடமும் ஏராளமான வாகனமும் இந்தத் தாக்குதலின் (பாது தாக்கப்பட்டதாக கொமாண்டோ படையினர் அறிவித்துள்ளனர். பலத்த உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. இத்தாக்குதலின் பின்னர் இஸ்ரேலிய துருப்புகளுக்கும் கொமாண்டோ துருப்புகளுக்கும் நேருக்கு நேர் ஒரு சண்டை நடைபெற்றதாகவும் கூறப்பட்டது.


இதே வேளையில் ஜோர்டானியப் படைகளுக்கும் இஸ்ரேலிய படைகளுக்கும் இடையில் இளவரசர் முகம்மது பாலத்தக்கு சுமார் 7 மைல் கறுக்கப்பால் யந்திர துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாக அம்மானில் அறிவிக்கப்பட்டது.

# புதிய எல்லைப்படம் வரையவேண்டுமாம்

## ஜெனரல் டயான் விருப்பம்

இஸ்ரேலின் தற்போதைய எல்லைகளைப் பலப்படுத்த வேண்டுமென்றும், இஸ்ரேல் தற்பொழுது பிடித்திருக்கும் பகுதிகளை உள்ளடக்கியதாக எல்லைகளை நிர்ணயித்து பூகோளப் படம் வரையப்பட வேண்டும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் டாயான் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

எல்லைகளும் பலமாக வைத்துக் கொண்டால் காலப் போக்கில் அவை அங்கீகரிக்கப்படும் என்று இஸ்ரேலிய உதவிப் பிரதம மந்திரி திரு. அலோன் கூறியிருக்கிறார். நான்கு வல்லரசு மகாநாடு பற்றி அவர் குறிப்பிடுகையில், இஸ்ரேல் பிடித்துள்ள பகுதியிலிருந்து ஓட்டிவிடலாம் என்று அரபு நாடுகள் மயக்கம் கொண்டிருக்கலாம் ஆனல் அது ஒருபோதும் நடக்காது என்று குறிப்பிட்டார்.




1967-ம் ஆண்டில் அரபுநாடுகளுக்கும் இஸ்ரேலியருக்கும் இடையில் நடைபெற்ற சண்டையின் ... இஸ்ரேல் கைப்பற்றிக்கொண்ட இடங்களை

### பயமுறுத்தல்

நியூயார்க், ஏப். 7

அமெரிக்க அதிபர் திரு நிக்ஸனைக் கொலை செய்யப் போவதாகப்

தென்வியட்னும் தேர்தலில்

# தேசியவிடுதலை முன்னணியும் கலந்து கொள்ளலாம்

## முதலில் போர்நிற்க வேண்டுமா

பாரிஸ், ஏப். 7

தென்வியட்னுமில் தேசிய விடுதலை முன்னிணியில் கலந்துகொள்ளக் கூடியதாக பொதுத்தேர்தல் நடத்துவதற்கு தென்வியட்னும் மீண்டும் விருப்பம் தெரிவித்துள்ளது.

தேசிய விடுதலை முன்னணியும் கலந்துசொள்ளக்கூடியதாக பொதுத்தேர்தல் ஒன்றினை நடத்த தென் வியட்னும் தயாராய் இருக்கின்றது. ஆனல் இதற்கு முதலில் சண்டை நிற்க வேண்டும் என்று பாரிஸில் நடைபெறும் வியட்னும் அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் தென் வியட்னும் தூதுக்குழுவின் தலைமைப் பிரதிநிதி நிருபர்களிடம் கூறினர்.

தேசிய விடுதலை முன்னணியினர் முதலில்சண்டை நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டு அரசியலில் நேரடியாக இறங்க முன்வர வேண்டுமென்று அவர் கூறினர்.

இதற்கிடையில் வியட்னுமிலிருக்கும் தனது துருப்புகளில் ஒரு பகுதியை வாபஸ் பெறுவதற்கு அமெரிக்கா விரும்புவதாகக் கூறப்படுகின்றது.

# நெல் லொறிக்கு துப்பாக்கிச் சூடு

## கொள்ளைக்காக நடந்ததாம்

முல்லைத்தீவு, திங்.

முல்லைத்தீவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றுக்கு பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் இனந்தெரியாத சிலர் துப்பாக்கியால் சுட்டனராம்.

ஆனந்தபுரம் குடியேற்றத் திட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டினல் லொறி டயர் வெடித்தது. தொடர்ந்து ஓட முடியாத நிலையில் இருந்த லொறியை அவ் வழியே வந்துகொண்டிருந்த இராணுவ ஜீப் பொலிஸ் நிலையத்தில் சேர்ப்பித்தது.

நெல் கொள்வனவு செய்வதற்காக கரவெட்டியிலிருந்து இங்கு வந்ததாகக் கூறப்படும் இந்த லொறியில் வந்தவர்களிடம் உள்ள பணத்தைக் கொள்ளையடிப்பதற்காகவே இவ் வித துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இது பற்றி முல்லைத்தீவு பொலிஸ் புலன் விசாரணை செய்கின்றனர்.

# ஜீ சீ ஈ. உயர்தர பரீட்சையில் 22,684 பரீட்சார்த்திகள்

## 174 நிலையங்களில் நடக்கும்

### மேலும் 20ஆயிரம்

கோட்டை, திங்கள்

ஏப்ரல் 20ந்தேதி தொடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறையில்

## உயிர்த்த ஞாயிறு

பருத்தித்துறை திங்கள்

பருத்தித்துறை அர்ச். தொம்மையப்பர் ஆலயத்தில் வண. பிதா. கட்டளைக்குரவர் எஸ். தேவராஜா அடிகளால் பெரிய வெள்ளியன்று காலை சற்பிரசாத எழுந்தேற்றம் செய்து வைக்கப்பட்டது. பிற்பகல் விசேஷ பூசையும் யேசுநாதரின் மறைவையொட்டி சிலுவைப் பாதையும் நடாத்தப்பட்டது. உயிர்நீத்த ஞாயிறு நள்ளிரவு ஆசிர் வழங்கப்பட்டது. கரவெட்டி அர்ச். அந்தோனியார்கோவிலிலும் இதே போன்ற கிரிகைகள் வண. பிதா சிங்கராயர் அடிகளால் நடாத்தப்பட்டு இறுதியில் பூசைப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

## பிடி அரிசித்திட்டம்

திருகோணமலை, திங்கள்

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வார்ட்டில் தங்கி இருக்கும் காச நோயாளர்களின் உணவுக்காகப் பாடசாலை மாணவ மாணவிகள் பிடியரிசி கொடுத்து உதவி வருகின்றனர். இதனல் காச நோயாளர்களுக்குத் தினமும் ஒருவேளை உணவு கொடுக்கப்படுகிறது. பொதுமக்களின் ஆதரவும் இப்பிடி அரிசித் திட்டத்துக்குக் கிடைக்குமாயின் இந்த உணவளிக்கும் சலுகையை மற்ற நோயாளர்களுக்கும் வழங்கலாம் எனச் சுகாதார சங்க செயலாளர் திரு. டி. விமலசேகரம் தெரிவித்தார்.

## கடற்றெழில் அமைச்சரின் விஜயம்

திருக்கோணமலை, திங்கள்

கடற்றெழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன நேற்று இங்கு விஜயம் செய்தார். விசேஷ விமானத்தில் வந்திறங்கிய அமைச்சர் சீனன்வாடியில் நிறுவப்படும் செயற்கை மீன்பிடித் துறைமுகத்துக்கும் பின்னர் கடற்படைத் தளம் அமைந்துள்ள டொக்யாட்டுக்கும் சென்று அங்குள்ள கல்விப் பகுதியைப் பார்வையிட்டார். கடற்படைத்தளபதி திரு. ராஜன் கதிர்காமர் அமைச்சரை வரவேற்றார்.

......

தேயிலை ஏற்றவந்த

## தொழிலாளி திடீர் மரணம்

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலைத் துறைமுகத்தில் தேயிலை ஏற்றுமதிக்காக வந்து தங்கிநிற்

# பல்கலைக்கழகங்களில் கலைப்பிரிவுமூடப்படும்

## தேசிய உயர் கல்விச்சபை யோசனை

கொழும்பு, திங்கள்

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் கலைப் பிரிவை மூடிவிடுவதற்கு தேசிய உயர் கல்விச்சபை ஆலோசித்து வருகிறது, வருகிறது. கலைப்பட்டதாரிகள் போதுமான அளவு நாட்டில் இருப்பதாலேயே இவ் வித முடிவு எடுக்கப் படுவதாக கருதப்படுகிறது.

விஞ்ஞானம், தொழில் பிரிவுகள் தொடர்ந்து விஸ்தரிக்கப்பட விருக்கிறது. இதற்காக 15 போராசிரியர்கள் மேலதிகமாக நியமிக்கப் படவேண்டும் என்றும் தேசிய உயர் கல்விச் சபை கல்வி அமைச்சைக் கேட்டுக் கொண்டுள்ளது.

கலைப்பிரிவுக்கு 30 கோடி ரூபா செலவிடப் பட்டுள்ளதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

--

## பட்டினசபை தீர்மானம்

ஊர்காவற்றுறை, திங்.

உணவுப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலைகளை இலங்கையின் எப்பகுதிகளிலும் ஒருமுகப்படுத்தவேண்டும் என உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை ஊர்காவற்றுறை பட்டினசபை நிறைவேற்றியுள்ளது.

......

## நாய் ஆறுப்பால வேலைகள் ஆரம்பம்

வவுனியா, திங்.

வவுனியா மாவட்டத்திலுள்ள முல்லைத்தீவுப் பகுதியில் தடைபட்டிருந்த நாயாறுப்பால வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பிரதமருடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்தே இவ் வேலைகள் மீண்டும் தொடங்கியுள்ளன. இப்பாலம் இவ் வருட முடிவுக்குள் பொது மக்கள் பாவிப்புக்கு விடப்படுமெனத் தெரியவருகிறது.

## ஈழகேசரி பொன்னையா நினைவு விழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

அளவெட்டி, செவ்.

ஈழகேசரி பொன்னையா நினைவு விழா இறுதி நாள் நிகழ்ச்சிகள் பின் வருமாறு:-

கலையரசு க. சொர்ணலிங்கம் தலைமையில் நாடகப் போட்டிகள் நடைபெறும். அப்போட்டியில் குப்பிளான் கலைவாணி நாடக மன்ற புதுவாழ்வு என்னும் நாடகமும், யாழ் செஞ் சுடர் கலாமன்ற நிரந்தரமா என்ற நாடகமும், கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய ''அன்பு'' என்னும் நாடகமும், இளவாலை நாவரசன் கலா மன்ற சைவ நீதி என்ற நாடகமும்' பருத்தித்துறை இளைஞர் நன்னெறிக் கழக தங்கத்தில் தங்கம் என்னும் நாடகமும், ஏழாலை மேற்கு சத்திய வெற்றி என்னும் நாடகமும், இறங்காலை பாரதி மன்ற பகைவனுக் கருள்வாய் என்னும் நாடகமும் இடம் பெறும்.

நாடக போட்டியில் வெற்றி பெறுவோருக்கு ஆசிரிய பயிற்சி கலாசாலை அதிபர் எஸ். விஸ்வலிங்கம் பரிசில்கள் வழங்குவார்.

......

வட்டுக்கோட்டையில்

## காங்கிரஸ் கிளைகள்

சுழிபுரம், திங்கள்

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கிளையை திறக்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. தமிழ் காங்கிரஸ் பிரமுகர் வழக்கறிஞர் எம். கே. சுப்பிரமணியம். பல பிரமுகர்களை அழைத்து ஆலோசனைக் கூட்டங்கள் நடாத்திவருகின்றார். முதலாவது கிளை நெல்லியான்-பொன்னலை கிராமத்தில் திறக்கப்பட விருக்கின்றது.

# நெல் விளைச்சலில் வவுனியாவின் சாதனை

## பயமுறுத்தல்

நியூயார்க், ஏப். 7

அமெரிக்க அதிபர் திரு நிக்ஸனைக் கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தியதாகக் கூறப்படும் ஒரு 20 வயது வாலிபரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.



1967-ம் ஆண்டில் அரபுநாடுகளுக்கும் இஸ்ரேலியருக்கும் இடையில் நடைபெற்ற சண்டையின் போது இஸ்ரேல் கைப்பற்றிக்கொண்ட இடங்களை இப்படம் காட்டுகின்றது.

# சீனகம்யூனிஸ்ட் கட்சி ஒன்பதாவது மாநாடு

## தலைமைக் குழு அறிக்கை

பீகிங், ஏ7.

சீன கம்யூனிட் கட்சியினர் ஒன்பதாவது காங்கிரஸ் மகாநாட்டை யொட்டி காங்கிரஸ் தலைமைக் குழு பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்பதாவது காங்கிரஸ் ஏப்ரல் 1 ம்திகதி பீகிங்கில் சிறப்புடன் ஆரம்பித்தது.

எமது சிறந்த முதல்வர் தலைவர் மாஓ சே-துங் அவர்கள் இன்றைய கூட்டத்திற்கு தலைமை வகித்து ஒரு மிக முக்கியமான உரையை நிகழ்த்தினர்.

தலைவர் மாஓ அவர்களால் நேரடியாகவே முன்னேடியாக ஆரம்பிக்கப்பட்டு, தலைமை தாங்கப்பட்டு நடத்தப்பட்ட மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி மகத்தான வெற்றியை ஈட்டிவிட்ட ஒரு நேரத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்பதாவது தேசிய காங்கிரஸ் நடத்தப்படுகின்றது. இந்த மகத்தான புரட்சி காங்கிரஸிற்கானபோதியளவு அரசியல் ரீதியான, சித்தாந்த ரீதியான, ஸ்தாபனரீதியான நிலைமைகளை தயாரித்துள்ளது.

தலைவர் மாஓவுடனும் உபதலைவர் லின் பியௌவுடனும் மேடையில் ஏறிய தோழர்கள், சௌ என்லாய் சென் போ ரா, காங் ஷெங்,

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 8 வது மத்திய கமிட்டியின் 12 வது பிரிவு படுத்தப்பட்ட பிளீனக் கூட்டத்தின் தீர்மானத்தின்படி, பல்வேறு மட்டங்களிலுமுள்ள கட்சி ஸ்தாபனங்களின் முழுமையான ஜனநாயக ஆலோசனையின் மூலம், பரந்துபட்ட வெகுஜனங்களின் கருத்தை பரந்தளவு பெற்றதன்பின்பு காங்கிரஸிற்கு பிரதிநிதிகள் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். மகத்தான பாட்டாளி வர்க்ககலாச்சார புரட்சியில் புடம் போடப்பட்ட அவர்கள், போராட்ட உணர்வும், பலம் வாய்ந்த போராடும் உறுதியுடையவர்களாகவும், மார்க்ஸிஸம் லெலிஸிஸம் மாஓயா சேதுங் சிந்தனையின் அடிப்படையில் தலைவர் மாஓவின் பாட்டாளி வர்க்க புரட்சி மார்க்கத்தின் வழி காட்டுதலின் கீழுள்ள மகத்தான புகழ்மிக்க தவறற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னெப்பொழுதுமில்லாத ஐக்கியத்தைப் பூரணமாகக் காட்டுபவர்களாகவுமிருக்கின்றார்கள். தற்போதைய காங்கிரஸ் ஒரு வலிமைமிக்க காங்கிரஸ் ஐக்கியத்தின் ஒரு காங்கிரஸ் ஒரு வெற்றிக் காங்கிரஸ என்பதை இது குறிக்கின்றது. எமதுகட்சியின்வரலாற்றின் மீது அது ஒரு ஆழமான செல்வாக்கை உடையதாக இருக்கும்.

## ஆயுதப் புரட்சிக்கு சீன தொடர்ந்து உதவும்

ஹொங்கொங், ஏப். 7

தென் கிழக்காஸிய நாடுகளில் ஆயுதப் புரட்சிகள் நடப்பதற்கு சீன தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் என்று அறிவித்துள்ளது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 9-வது பேரவை மகாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது

......

## கல்கத்த குழப்பத்தில் ஒருவர்பலி

கல்கத்தா, ஏப். 7

கல்கத்தாவில் கலைநிகழ்ச்சியொன்றின்போது ஏற்பட்ட கோஷ்டி மோதலில் ஒருவர் பலியானர். பலர் காயமடைந்தார்கள். பலர்கைது செய்யப்பட்டனர்.

கலைநிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்த போது ஒலிபெருக்கி தடைப்பட்டதால் மண்டபத்தின் உள்ளே இருந்தவர்கள் மேசை நாற்காலிகளை வீசி எறிந்து கலாட்டா பண்ணினர்கள். வெளியிலிருந்தவர்களும் உள்ளேபோக முயற்சித்தார்கள். அதன்பின் ஏற்பட்ட கைகலப்பை சமாளிக்க பொலிசார் முயன்றதில் 50 பொலிசார் காயமடைந்தனர். பொலிசார் தடிகளால் அடித்து கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். வெளியில் ஓடியவர்கள் தெருவில் போய்க்கொண்டிருந்த வாகனங்கள்மீது கற்களை வீசினர்கள். தீயிடுவதிலும் ஈடுபட்டனர்.

## புற்றுநோயைக் குணப்படுத்தும் மருந்து

டோக்கியோ, ஏப். 7

புற்றுநோயைக் குணப்படுத்துவதற்கு பயன்படக்கூடிய ஒரு மருந்தை ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறர்கள். காளானிலிருந்து உருவாக்கப்பட்ட இம்மருந்தை ஆயிரக்கணக்கான எலிகளுக்கு செலுத்தி பரிசோதித்ததில் நல்லபலன் ஏற்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்திருக்கிறர்கள் மனிதர்களுக்கு இம்மருந்தைப் பயன்படுத்துவதற்கு இன்னும் பரீட்சைகள் நடத்த வேண்டியிருக்கின்றதாம்.

## பெய்யவில்லை

திருகோணமலை, திங்

ஏரிகளில் நீர் வற்றிவிட்டதனல் நெற்பயிர்ச் செய்கை கருகி நாசமாகிவிட்டது. குடிப்பதற்கும், குளிப்பதற்கும்கூட நீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## நாடு திரும்பினர்

சுழிபுரம், திங்கள்

கப்பல் கட்டும் தொழிலில் விசேட பயிற்சிபெற உபகாரச் சம்பளத்தில் சிக்காக்கோ சென்ற சித்தங்கேணியைச் சேர்ந்த திரு. கே. இராமநாதன் நாடு திரும்பியுள்ளார். இவர் தற்போது காரைநகரிலுள்ள கப்பல்கட்டும் நிலையத்தில் நியமனம் பெற்றுள்ளார்.

# 22,684 பரீட்சார்த்திகள்

## 174 நிலையங்களில் நடக்கும்

கோட்டை, திங்கள்

ஏப்ரல் 20ந்தேதி தொடக்கம் மே மாதம் 6ந் தேதி வரை நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைக்கு 22,684 மாணவ மாணவிகள் தோற்றுகிறார்கள். இப்பரீட்சைக்கான நேர அட்டவணைகள், பிரவேசச்சீட்டு ஆகியன ஏப்ரல் 14ந் தேதி பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

பாடசாலைகளில் இருந்து இப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு நேர அட்டவணை, பிரவேசப்பத்திரம் ஆகியன அவர்களின் பாடசாலைகளுக்கு அனுப்பப்படவிருக்கின்றன. 174 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவிருக்கிறது.

## கிளைகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செவ்.

நேற்றுக்காலை நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் விஷயாலோசனைக் கூட்டத்தின் முதலாவது நிகழ்ச்சியாக தமிழரசுக்கட்சியின் தலைமைப் பதவி பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கத்திடம் கையளிக்கப்பட்டது.

மூவர்ண சின்னம் பொறித்த காந்திக் குல்லாயுடன் விழாவுக்கு வந்திருந்த கட்சியின் தலைவராகவிருந்த டாக்டர் இ. மு. வி. நாகநாதன், அங்கத்தவர்களின் பலத்த கரகோஷங்களுக்கிடையில் திரு. இராசமாணிக்கத்திடம் கையளித்தார்.

கூட்டத்தின் முதலாவது தீர்மானமாக கட்சியின் இயங்காதிருக்கும் கிளைகளை உடனடியாக புனருத்தாருணம்செய்வதென்ற 1968-ம் வருடத்திய மூன்றும் மாதத்துப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## மேலும் 20ஆயிரம் சோவியத்துருப்பு

பிராக், ஏப். 7

அண்மையில் செக்கோஸ்லவாக்கியாவில்நடைபெற்றுள்ள சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து சுமார் 20 ஆயிரம் துருப்புகளுக்கு மேல் புதிதாக சோவியத் யூனியன் செக்கோஸ்லவாக்கியாவுக்கு அனுப்பியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

செக்கோஸ்லவாக்கிய அரசாங்கம் புதிதாக விதித்துள்ள கட்டுப்பாடுகளை பெரிய தொழில்நிலையங்களிலுள்ள தொழிலாளர்கள் பலரும் வரவேற்றிருக்கின்றனர்,

## நைஜீரியா மறுப்பு

லேகோஸ், ஏப்ரல் 7

உஸ்வாக்கோலி என்ற தனது நகரைத் திருப்பிப் பிடித்துக்கொண்டு விட்டதாகப் பியாப்ரா ராணுவ அதிகாரிகள் தெரிவித்திருப்பதை வெறும் பிதற்றல் என்று நைஜீரிய ராணுவ அதிகாரிகள் வர்ணித்துள்ளனர். அந்த நகரம் இன்னமும் தங்கள் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர்

## லண்டன் பயணமானர்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த க. ஜெகநாதன் விவசாயப் பொறியியலில் உயர்கல்வி பெறுவதற்கு மார்ச் மாதம் 29-ம் திகதி இங்கிலாந்து சென்றுள்ளார். நான்கு வருடங்கள் கல்விபயில அங்கு செல்லும் இளைப்பாறிய ஆசிரியர் திரு. த கந்தையா தம்பதிகளின் புதல்வராவார். இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார்.

# நீதிமன்றம் தூங்குகிறதாம் தொழிலாளிகள் புகார்

அட்டன், திங்கள்

அட்டன் தொழில் நீதிமன்றத்தில் சென்ற 4 மாதங்களாக விசாரணைகள் நடைபெருததால் 2000க்கும் மேலான வழக்குகள் விசாரிக்கப்படாது தேங்கிக் கிடக்கின்றனவாம்.

சமீபத்தில் இந்தத் தொழில் நீதிமன்றத் தலைவர் இடமாற்றஞ்செய்யப்பட்டதனலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதெனவும், புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் ஒருசில விசாரணைகளையே நடத்தியுள்ளார் எனவும் கூறப்படுகிறது. தொழிற்சங்கப் பிரமுகர்கள் இதனல் தொழில் நீதிமன்றம் தூங்குகிறது எனப் புகார் தெரிவித்துள்ளனர்.

## தொழிலாளி திடீர் மரணம்

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலைத் துறைமுகத்தில் தேயிலை ஏற்றுமதிக்காக வந்து தங்கிநிற்கும் 'வைனுயி' என்னும் சரக்குக்கப்பலின் எஞ்சின்றூம் வைப்பராகக் கடமையாற்றும் ஹனன் என்னும் 24 வயதுடைய நோர்வேஜியன்ஒருவர்கப்பலிலிருந்து கடலில் குதித்தபோதுதிடீர் மரணமானர். திருமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றபோது அங்கு மரணமான இவரது சடலம் இங்கேயே அடக்கம் செய்யப்பட்டது.

......

## இடமாற்றத்துக்கு ப. சபை ஆட்சேபம்

பருத்தித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறைப் பட்டினசபை வருமான வேலை மேற்பார்வையாளர் திரு. கே. மார்க்கண்டு, திருகோணமலைப் பகுதியிலுள்ள கிளிவெட்டி கிராமசபைக்கு மாற்றப்பட்டுள்ளதை ஆட்சேபித்து, மேற்படி பட்டினசபை ஏகமனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி மேலதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளது.

இரண்டாம் வட்டார உறுப்பினர் திரு. கே. ராஜவேல் முன்மொழிந்த இப்பிரேரணையை சபைத் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேல் வழிமொழிந்தார்.

## மூன்று பிரதி குறைப்புக்கு எதிர்ப்பு

பருத்தித்துறை திங்கள்

''ஈழத்துச் சினிமா வளர்ச்சியென்ற போர்வையில், தமிழ்க்கலாச்சாரத்தை நசுக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது வருந்தத்தக்கது. தென் இந்திய தமிழ்ப்படங்களின் இறக்குமதியை மூன்று பிரதிகளாகச் குறைத்தமை தவருனது'' என நெல்லியடி சினிமா ரசிகர் சங்கத் தலைவர் திரு, ஏ. ஏ. யோகராசா நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் தலைமை வகித்துக் கூறினர்.

செயலாளர் திரு. ப. மு. முனஸ் நன்றி கூறினர்.

......

## கடும் வரட்சி

திருக்கோணமலை, திங்கள்

தீவடங்கிலும் தற்போது நிலவிவரும் கடும் வரட்சியால் திருமலைப்பகுதி வெகுவாகப் பாதித்துள்ளது. 3 மாதத்திற்கு மேல் இங்கு மழைபெய்யவில்லை.

# நெல் விளைச்சலில் வவுனியாவின் சாதனை

வவுனியா, திங்கள்

வவுனியா மாவட்டத்தில் ஐம்பதினுயிரம் ஏக்கர்நிலத்தில் 1968-69 காலபோகத்தில் நெற்செய்கையில் இரண்டு கோடி இருநூற்றி ஐம்பதினுயிரம் புசல் நெல் விளைவு கொடுத்துள்ளது. இது இவ்வருடம் வவுனியாவில் பெரிய சாதனையைக் கொடுத்துள்ளது. ஏக்கருக்கு சராசரி 45 புசல் நெல் விளைவு நடைபெற்றுள்ளது. இருந்தும் சுமார்500 ஏக்கர் நிலத்தில் ஐ. ஆர். 8நெல்லு விதைக்கப்பட்டது இதில் மாத்திரம் ஏக்கருக்கு சராசரி 135 புசல் ஏக்கருக்கு விளைவு கிடைத்துள் து ஆனல் இது மேற் கூறிய புள்ளிவிபரத்தில இடம்பெறவில்லையென அறியக்கிடக்கின்றது. இம்முறை கடும் வறட்சியின் காரணமாக சுமார் 5 ஆயிரம் ஏக்கர் அளவுல் விதைக்காமலும், விதைத்து அழிந்தும் உள்ளன.

விவசாயிகளின் அயராத ஊக்கமும் வவுனியா அரசாங்க அதிபர் திரு. வி. சி. பேரேராவின் ஊக்கமும் இவ்வருடம் வறட்சியாகஇருந்தபொழுதும் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் விதைக்காமல் விட்டும்இவ்வளவு புசல் கிடைத்தது. இதற்கு விவசாய இலாகா உத்தியோகத்தரும், ஏனைய உணவு உற்பத்திக்கு பொறுப்பாக இருந்த சகல உத்தியோகத்தரின் உழைப்பும் உதவியுள்ளது.

# 'சிவபாதவிருதயருக்கு நாம் நன்றி கூறவேண்டும்'

சித்தங்கேணி, திங்..

வேதநெறிதழைத்தோங்கவும், சைவத்துறை விளங்கவும் தக்க சமயத்திலேதிருவவதாரம் செய்த முத்தமிழ் வித்தகர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுரைத் தந்தருளிய சிவபாத விருதயருக்கு நாம் வணக்கஞ் செலுத்துதல் வேண்டும். சிவபாத விருதயர் இல்லபவிட்டால் திருஞானசம்பந்த மூர்த்தி நாயநாரும் இல்லை சமண புத்த சமயங்களின் நெருக்கடியேற்பட்ட காலத்தில் சைவத்தைக் காத்த பெருமை அவருக்கே உரியதாகும்.

வடக்கு கிழக்கு சித்தங்கேணித் திருமுறைக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற திருமுறை விரிவுரைகளின் தொடர்பில் 2-ம் திருமுறை பற்றிய விரிவுரையின்போது மாவை வேதாகம பூஷணம் பரமஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் மேற்கண்டவாறு கூறினர்.

2ம் திருமுறை எமதுநாளாந்த வாழ்க்கை முறைகளைக் கூறுகின்றது. திருநீற்றுப் பதிகமும் கோளறு பதிகமும் நாள் தோறும் பாராணஞ் செய்தால் எவ்வளவோ பயனையடையலாம் என்றும் அவர் கூறினர்.

பண்டிதர் த. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் மேலும் அவர் பேசுகையில் இளஞ் சமுதாயத்தினர்மாத்திரமல்ல சைவ மக்கள் கூட சமய நூல்களைக் கற்காமல் அலட்சியம் செய்வதாகவும் ஒவ்வொருவரும் பாலர்களைச் சமய வழியில் நடத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

......

## மாஜிஸ்திரேட் இடமாற்றம்

திருகோணமலை, திங்கள்

திருகோணமலை மாவட்ட மாஜிஸ்திரேட்டாக திரு விக்கிரமசிங்கி நியமிக்கப்பட்டுள்ளார். இங்கு கடமையாற்றிய எஸ். பி. குணவர்த்தன இடமாற்றலாகிச் சென்றுள்ளார்.

......

பொலிஸ்

## நாய்களுக்கு நஞ்சூட்டப்பட்டதா

அநுராதபுரம், திங்கள்

அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் இருந்த துப்பறியும் நாய்கள் இரண்டு இறந்துவிட்டதாகத் தெரிகிறது. துப்புத்துலக்குவதற்காக இங்கு கொண்டுவரப்பட்டிருந்த இந்த நாய்களை வெளியிலுள்ளசிலர் நஞ்சூட்டிக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது. நாய்களின் சடலம் பிரேத பரிசோதனைக்கா அனுப்பப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

'உண்மையினாலும் அன்பினாலும் நாம் உலகத்தையே வெற்றி கொள்ள முடியும் என்பது என் உறுதியான நம்பிக்கை'

--மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 26-ந்திகதி
(8-4-69)


## உயர் கல்வி விசாரணை

இங்கு உயர்கல்வி சம்பந்தமாக ஆராய்வதற்கு மூன்று அங்கத்தவர் கொண்ட குழுவொன்றை நியமிக்க பிரதமர் சம்மதித்துள்ளதாகவும் இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இந்தக் குழுவில் இலங்கையைச் சேர்ந்த ஒருவரும் இந்தியாவைச் சேர்ந்த ஒருவரும் மற்றவர் மேல்நாடு ஒன்றைச் சேர்ந்தவராகவும் இருப்பர் என்று தெரிகிறது. பல்கலைக் கழகக்கல்வி பற்றி பலரும் குறை கூறுகின்றனர். இக் குறைகளை ஆராய்ந்தறிந்து அவற்றுக்கு நிவாரணம் தேடுவது அவசியம். இந்த வகையில் ஒரு குழு நியமிக்க வேண்டுமென்ற யோசனை வரவேற்கக்கூடியதே'

இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி பற்றி ஆராய்வது இதுதான் முதல் தடவையல்ல. பேராசிரியர் நீடாம் தலைமையில் ஒரு கமிஷனும் பின்னர் திரு. டி. ஸி. ஆர். குணவர்த்தன தலைமையில் ஒரு கமிஷனும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்தன, இந்த இரண்டு கமிஷன்களும் தங்கள் அறிக்கைகளில் தெரிவித்த சிபார்சுகள் அமுல் செய்யப்படவில்லை. பல்கலைக்கழகஇட நெருக்கடிதான் பல பிரச்னைகளுக்கும் காரணமென்றும் காலியில் ஒரு பல்கலைக்கழகமும் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகமும் நிறுவப்பட்டால் இப் பிரச்னைகள் பெருமளவில் நீங்கிவிடுமென்றும் நீடாம் கமிஷன் தெரிவித்திருந்தது. இந்தச் சிபார்சை அரசாங்கம் ஏற்று இதுவரை அமுல் செய்ய முன்வரவில்லை. இதற்குப் பதிலாக பல கனிஷ்ட பல்கலைக் கழகங்கள் நிறுவியிருக்கிறது இதனால் உயர்கல்விப் பிரச்னை எந்த அளவுக்குத் தீரப் போகிறதோ?

பல்கலைக்கழ்கம் சுயஉரிமையுடையதாக இருக்கக்கூடாதென்றும் கல்வி அமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்றும் கல்வி அமைச்சர் கருத்துத் தெரிவிக்கிறார் பல்கலைக்கழக உப அத்தியட்சகர் நியமனம், கல்வி அமைச்சரே நியமித்த தேசிய உயர்கல்விச்சபையின் சிபார்சில், கல்வி அமைச்சரின் விருப்பப்படியே நடைபெறுகிறது. என்றாலும் அதில் கூட எத்தனை பிரச்னைகள் உருவாகின்றன. இந்நிலையில் கல்வி அமைச்சரின் நேரடிக்கட்டுப்பாட்டில் பல்கலைக்கழகங்கள் இயங்குவதானால் எப்படியிருக்கும்? உயர் கல்வி பற்றி ஆராய நியமிக்கப்படவிருக்கும் குழு பல்கலைக்கழக மாணவர் மத்தியில் அதிகரித்து வரும் அதிருப்தி பற்றியும் அதற்கான அடிப்படைக் காரணங்கள் பற்றியும், பல்கலைக்கழகத்தில் அரசியல் நடவடிக்கைகள் பற்றியும் ஆராயுமென எதிர்பார்க்கலாம்.

கமிஷன்களையும், கமிட்டிகளையும் நியமிப்பதாலோ, அவற்றுக்குப் பெருந்தொகைப் பணம் செலவிடுவதாலோ குறைகள் நீங்கிவிட மாட்டா. அவை ஆராய்ந்து தெரிவிக்கும் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து, அவைகளின் சிபார்சுகளையும் அமுல் செய்யவேண்டும்.

## ம. பொ. சி. வருகை

வருவாரா, வரமாட்டாரா, வரவிடுவார்களா, அனுமதி கிடைக்குமா? இப்படிப் பலரும் பலவித

பொ. சி.யின் வருகையை இந்தியாவிலேயே இப்போது இல்லாமல் போய்விட்ட 'நாம் தமிழர்'

# விஜயனால் புதிப்பிக்கப்பட்டது கோணேஸ்வரர் ஆலயம்

**பாண்டிய மன்னன் மகளைத்திருமணம் செய்து கொண்டுவந்த விஜயன்கூட திருகோணேஸ்வரத்தைப் புனருத்தாரணம் செய்து சிவலிங்கம் வைத்து வணங்கினான் என்கிறார் இக் கட்டுரை ஆசிரியர்.**

— இ. குமாரசாமிசர்மா —

சோழ மன்னர் ஈழ மண்டலத்தைஆண்டபோது கோணேஸ்வரத்தலம் மிக மேன்மையுடன் ஆதரிக்கப் பட்டுவந்தது. திருகோணமலை தட்சிண கைலாசமென்ற திருப்பெயர் வாய்ந்தது. இலங்கை வேந்தனும் இராவணனால் கொண்டுவரப்பட்ட இலிங்க மூர்த்தி எழுந்தருளியுள்ள தலமுமாகும் இது. அவன் பூசித்து உயர்ந்த பதியும் இதுவே. தேவாரமும், திருப்புகழும் பெற்றது திருகோணமலை. இது உத்தர கைலாசத்தில் வாயுவாற் பிடுங்கிய சிகரம் மூன்றுள் ஒன்றாகும் இதனை.

''முன்னர் வீழ்ந்திடு சிகிரி காளத்தியாய், மொழிவர் பின்னர் வீழ்ந்தது திரிசிராமலையெனும் பிறங்க, லன்னதற் பின்னர் வீழ்ந்தது கோணமா வசலமென்ன மூன்றையும் தக்ஷிணை கைலையென்றிசைப்பார்''.

எனும் செவ்வந்திப் புராணச் செய்யுளாலுமறியலாம்.

திருகோணமலை, திரிகூடம், மச்சேசுரம் எனவும் பெயர்பெறும். மகா சுனை என்னுந் தீர்த்தமு மிங்கே உளது. இதன் பெரும் பேரற்புதங்களைக் கூறுவது தக்ஷிண கைலாசபுராணம். சோழமன்னனான கயவாகு மகாராசா . சோழநாட்டிலிருந்து கோணேசர் தலக் குடிமைகள் எனக் கொல்லன், குயவன், நாவிதன், ஏகாலி, வள்ளுவர் என்றித் தகையோரைச் சோழநாட்டிலிருந்து அழைப்பித்தான். அழைப்பித்தவர் களுக்குக் குடிநிலம் விளைபுலம் முதலியன சர்வ காரியங்களும் கொடுத்துக் கோயில் நிர்மானங்களைக் கவனிக்கும்படி விட்டான். இன்னும் கோணேஸ்வரருக்காகவெகுவான குளங்களும் கட்டுவித்தான். நெல்விதைப்புத் திறையுங் கோயிலுக்கென ஒதுக்கிவிடப்பட்டது. இன்னும் குளக்கோட்டு மகாராசா தென்னை, புன்னை, கமுகு, ஏர், பசுவினம்,

ராசசேகரன் இருவரும் திருகோணமலையின் பெருமை கேட்டுவந்து பாவநாச தீர்த்தத்திலும் படிந்து வணங்கி இறைவனுக்குத் தங்கப்பதக்கம், முத்துக்குடை, ஏழுபட்டு முத்துமாலை, வைர ரத்தினம் பதித்த தங்கப் பதக்கமும் சாத்துவித்து விடைபெற்றுத் தம் நகரஞ்சென்றனர். இவர்களைவிட புவனேகவாகு, கயவாகு மன்னன் என்பவர்களும் கோணநாயகரைப் பணிந்து அவரருள் பெற்று அவருக்குப் பொன்னும் மணியும் கொடுத்துப் பூசித்து உய்ந்தனர் எனச் சரித்திரம் சான்றுகூறுகின்றது.

கயவாகு மன்னருக்கு முன்னர் ஆதியிலே விசயன் கூடப் பாண்டியன் மன்னன் மகளை விவாகஞ்செய்து இங்குவந்தபின்னர் இலங்கையிலுள்ள ஐம்பெரும் ஆலயங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வர ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து சிவலிங்கத்தையும் வைத்து வணங்கினான். இவருறையும் பதியின் சூழல் காட்டுமுல்லை; குருக்கத்தி புன்னை: வேங்கை, செருந்தி; செண்பகம் குருந்து; முல்லையாவும் செழித்து வளர்ந்துள்ள சோலையாகும். இதனைச் சம்பந்தப்பெருமான்

''விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கை வெண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்
சூழ் கோணமாமலை''

என்று பாடியுள்ளார்.

கோணேஸ்வரருக்குவேண்டிய தொழும்பு முறை செய்யக்குளக்கோட்டு மகாராசா வெவ்வேறான பணியாளரை அழைப்பித்தான். அவர்களுக்கு வேண்டியன கொடுத்துக் குடி[illegible] பரம்பரையாகத் [illegible] செய்து வருமாறும் பணித்

திருகைலைநாதர் முன்னின்று சிவதோத்திரங்களை பண்ணுடன் பாடுவதற்கென்றான். புலவனும் ஆனந்த பரவசத்துடன் தன்குடியில் ஒரு குடும்பத்தை இலங்காபுரிக்கு கொண்டுவந்தான். அவர்களுக்கு அரசன் திரிகைலைக்கு முன்னே நாதகீதம் பாடத் திட்டம் பண்ணித் தலத்துக் கருகாமையில் விதைப்பு நிலமும் கடற்கரை யோரத்தில் வசிக்க ஓர் ஊரும் கொடுத்தான். அப்புலவனும் அவ்வூரை அன்போடு ஏற்று அங்கு வாழ்ந்து வரலானான், அரசன் அவ்வூர்க்குச் சம்பூர் எனப் பெயரிட்டான். அக் குடும்பத்தினருக்கே எக்காலமும் உரியதாக அவ்வூரைக் கொடுத்து அப்புலவனைக் கோயிற் திருவாசகம் பாடும் புலவனென நியமித்துப் பெயர் வழங்கினான்.

இந்துவெளிஎன்று அழைக்கப்பட்ட நிலாவெளிப் பகுதியிலுள்ளவர்கள் கடல்படுதிரவியங்களும், நாறவுணம் சுத்த நெல்லும் கோணேஸ்வரருக்கென இறையாக ஈந்தனர். தீஞ்சுவைக் கனிகளையும் சாந்தையும் தயிர். பால், நெல், அரிசி முதலியவற்றைக் கொட்டியாபுர மக்கள் உதவினர். இவ்வாறு பலரும் தம்மால் கொடுக்கக்கூடிய பொருளை கோணேஸ்வரருக்கு வரையாது கொடுத்துப் போற்றினர்.

குளக்கோட்டு மகாராசாவினால் அழைப்பிக்கப்பட்ட அடியார்கள் ஆசாரிமார், புலவர், வன்னியர், ஆலாத்திப் பெண்கள் இத்தியாதி அனைவர்க்கும் மன்னன் திருவாசகப் புறவனுக்கு அளித்தது போலவே சகல ஏற்பாடுகளும் அளித்து அவர்களை பரம்பரையாக அவ்வுரிமைகளை அனுபவிப்பதோடு பெருமானுக்குச் செலுத்த வேண்டிய தொழும்புமுறை ஆலயத்தில் வழுவக்கூடாது எனவும் விதித்தான் இத்தகைய சகல விபரங்களும்

பட்டிருக்கின்றன இம்மன்னன் நித்திலம் கொழிக்கும் கோணேஸ்வரத்தில்பெருமானுக்கென வைகாசித்திங்கள் பத்தாம் திகதியில் புகழ் பெறுமாலயமும் சிறந்த நகரமும் உயர்ந்த கோபுரமும் இரத்தினமணி மதிலும் சிறந்த பாபநாசச் சுனையும் முறைப்படி கட்டி முடித்ததாகவும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

திருகோணமலையிலுள்ள பிரடெரிக் கோட்டையைக் கட்டிய கற்கள் கோணையம்பதிக்குரிய கற்களே. அதன் வாயிலில் நிலையாகஇருக்கும் சிலாசனக் கல்லின் மேல்

''மின்னே குளக் கோட்டன் மூட்டும் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிடிப்பனே-மின்னேகேள்
பூனைக கண் செங்கண் புகைக் கண்ணன் ஆண்டபின்
தானே வடுகாய் விடும்''

என்ற செய்யுள் இருப்பதை இன்றும் காணலாம்.

இலங்கைக்கு வர்த்தக நோக்கமாக வந்த போர்த்துக்கேயர், டச்சுக்காரர் நம் ஈழத்தைக் கைப்பற்றிய போது கோயிலை இடித்தனர். அத்தலத்துள் இருந்த நவரத்தினங்களையும் சகல திரவியங்களையும், விக்கிரகங்களையும் கொண்டு சென்றனர். போர்த்துக்கேயர் கொடுமைக்குப் பயந்த அர்ச்சகர்கள், வன்னிமார்கள் ஆலயத் தொண்டர்கள் கோயிலிலுள்ள வேறு விக்கிரகங்களையும் தோள் மீது கொண்டு இரவோடிரவாகக் கடற்கரை வழியே சென்று அயல் கிராமங்களை அடைந்ததன் பயனாக எழுந்த பதியே தம்பலகாமத்திலுள்ள கோணேசர் ஆலயமாகும்.

ஈழததின் தமிழ்ப் பகுதியெங்கனும் சுற்றுலாச் செய்யப்பட்ட சோமாஸ்கந்த சந்திர சேகர சிவமூர்த்தங்களும் உமையம்மை தோற்றமும் தற்பொழுது ஆலயத்தில் வைக்கப் பட்டிருக்கின்றன. கோணேஸ்வரமலைக்கு பூசை நடந்தபின் இவ்விக்கிரகங்களுக்கு பூசை நடை பெறுகின்றது. இங்கு தமிழர் மாத்திரமன்றிச் சிங்கள மக்களும் ஏனைய மதத்தினரும் பாகுபாடின்றி உள்ளன்போடு வழி

## நாட்டிலும் நகரிலும்

ஒரு தேங்காயை கத்தி, அலவாங்கு இல்லாமல் வெறும் கைகளால் உரித்தெடுக்கக்கூடியவர்களை நீங்கள் பார்க்கலாம். சிலர் ஒரு முழுத் தேங்காயை முழங்கைகளால் உரிப்பார்கள். சிலர் கைகளை உபயோகிக்காமல் கால்களாலேயே உரித்துத் தள்ளிவிடுவார்கள். இத்தகு பலசாலிகள் இன்றும் எம்மிடையே இருக்கிறார்கள்.

பழைய காலத்தில், அதாவது சுமார் ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்பு, உரித்த தேங்காய் ஒன்றை அப்படியே இரண்டு கைகளாலும் நெரித்து, தேஙகாய்ப் பால் உண்டு பண்ணும் பராக்கிரமசாலிகளும் இருந்தார்கள். தற்காலச் சந்ததிகளுக்கு இப்படியான தேக பலம் இருப்பதில்லை. இதற்குக் காரணம் முன்னிருந்தவர்கள் உண்ட உணவுக்கும் இப்பொழுது வாழும் நாம் உண்ணும் உணவிற்கும் உள்ள வித்தியாசமே. இது ஒருபுறம் இருக்க.

முழு முட்டுக்காயை மட்டை உரிக்காமல், தலையில் அடித்து உடைக்கும் ஒருவரைக் கண்டிருக்கிறீர்களா? அப்படியும் ஒருவர் இருக்கிறார் இந்த ஈழநாட்டிலே. அவரை நீங்கள் பார்க்கவேண்டுமானால் கதிர்காமம், திருக்கேதீச்சரம், முன்னீச்சுரம் முதலிய ஸ்தலங்களில் காணலாம்.

திருநாவுக்கரசுவுக்கு இப்பொழுது நாற்பத்திரண்டு வயதுதான ஆகிறது. இவரை அறிந்தவர்கள் சித்தர் திருநாவுக்கரசு என்றுதான் குறிப்பிடுகிறார்கள். கொக்குவிலைச் சேர்ந்த திருநாவுக்கரசு சிறு வயதில் வியாபாரத் தொழிலகளில் ஈடுபட்டு, சம்சார வாழ்க்கையும் நடத்தினார். சிறிது காலம் போக, மனைவியார் இறந்துவிட்டார். அந்தத் துயரத்தினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ அவர் இன்று துறவறம் பூண்டுவிட்டார்.

ஆளைப் பார்த்தால் நல்ல வாட்டசாட்டமான சரீரம். நீண்ட முடியும், தாடியும். அரையில் ஒரு வேஷ்டி. தலையில் ஒரு துண்டு. பத்துப் பன்னிரண்டு வருடங்களாக அவருடைய உடம்பில் தண்ணீர் பட்டது கிடையாது. குளிப்பதுமில்லை, முழுகுவதுமில்லை. இத்தனை வருடங்களாக ஒரு நோய்

ரணமாக உடம்பிலிருந்து கிளம்பும் துர் நாற்றம் அவரிடத்தில் இல்லை.

திருநாவுக்கரசு ஒரு நாள் திடீரென்று கதிர்காமத்துக்குப் புறப்பட்டுவிட்டார்---- கால்நடையாக. முருகனுடைய அழைப்பு வந்துவிட்டது.

வவுனியா, குமரன்கடவலை, திரியாய், புல்மொட்டை, திருமலை மட்டக்களப்பு வழியாகக் கதிர்காமம் போய்ச் சேர்ந்தார். பாதங்கள் இரண்டும் இரத்தம் பீறிட்டுப் புண்ணாகிவிட்டன. நேரே கதிரமலைக்குப் போய் முருகனை வணங்கினார். கால் புண் தாங்க முடியவில்லை. திரும்பிவந்து கதிர்காமத்து வாசலில் எரிந்துகொண்டிருந்த நெருப்பில் காலை வைத்தார். புண்கள் மாயமாக மறைந்துவிட்டனவாம்.

அன்று தொடக்கம் அவர் ஒரு சித்த புருடராகிவிட்டார். இருநூறு முன்னூறு இளநீர்களை அப்படியே தலைமண்டையில் அடித்து உடைத்துவிடுவார். அவருடைய மண்டைக்குள் இரும்பு தான் இருக்கிறதோ என்று திடுக்கிடும்படியாக இருக்கும்.

சமீபத்தில் இந்தியாவில் உள்ள பல ஸ்தலங்களைத் தரிசித்துவிட்டு வந்திருக்கும் சித்தர் திருநாவுக்கரசு இந்தியாவுக்கே திரும்பிப் போக வேண்டுமென்று விரும்புகின்றார் அதற்கிடையில் வருகிற வருடப்பிறப்பன்று வெள்ளவத்தைப் பிள்ளையார் கோயிலில் முன்னூறு இளநீர்களைத் தலையில் அடித்துச் சிரசாபிஷேகம் செய்யப் போகிறாராம். சில சமயங்களில் திக்கொள்ளிகளால் தம்மையே சுட்டுக்கொள்வார். ஒரு கெடுதியும் உண்டாவதில்லை.

'உங்களுக்கு எப்படி இந்த சித்து வல்லமைகள் கிடைத்தன?' என்று கேட்டபோது ''நான் யோகாப்பியாசம் எதுவும் செய்துகொள்ளவில்லை. எல்லாம் முருகனுடைய கிருபைதான்' என்று அடக்கமாகக் கூறுகிறார். இப்படிச் சித்துகள் செய்து வந்தால் உங்களுடைய தபோபலம் குறைந்துவிடுமே என்றேன். அதற்கு அவர், ''இப்படி ஏதாவது செய்து காட்டாவிட்டால் சனங்கள் என்னைக் கள்ளச்சாமி என்று நினைத்துக் கல்லால் அடிப்பார்கள்'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம. பொ. சி. வருகை

வருவாரா, வரமாட்டாரா, வரவிடுவார்களா, அனுமதி கிடைக்குமா? இப்படிப் பலரும் பலவித சந்தேகத்துடன் அங்கலாய்த்துக்கொண்டிருந்த போது திட்டமிட்டபடி 'தமிழ்நாடு' சட்டமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கழகத்தின் தலைவரும் 'செங்கோல்' பத்திரிகையின் ஆசிரியரும், சிறந்த பேச்சாளருமான திரு. ம. பொ. சிவஞானம் நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து மக்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தினர். அவரை நாமும் நல்வரவு கூறி வரவேற்கிறோம்.

தமிழர் எங்கிருந்தாலும் இனத்தால் ஒருவரே. இனம், மொழி, கலை, கலாச்சாரத்தினல் ஒன்றுபட்டவர்கள்; நாட்டினலும் அரசியலாலும் வேறுபட்டவர்கள். ம. பொ. சி.யின் வருகையை இந்தியாவிலேயே இப்போது இல்லாமல் போய்விட்ட 'நாம் தமிழர்' இயக்கத்துடனும் திராவிட முன்னேற்றக்கழகத்துடனும் முடிச்சுப் போட்டு, கதை கட்டிப் பெரும்பான்மை சமூக மக்கள் மத்தியில் துவேஷத்துக்கு தூபம் போடச் சிலர் காத்திருக்கிறார்கள் என்பது பலரும் அறிந்ததே. இனம், மொழி, மதம், கலை, கலாசாரத் தொடர்புகளையும் உறவுகளையும் துவேஷத்தால் தடை செய்துவிடமுடியாது. ம. பொ. சி. போன்றவர்களின் இலங்கை விஜயத்தை இலங்கை-இந்திய நல்லுறவை வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்வதில் தான் நமது ராஜதந்திரத்தின் வெற்றி தங்கியிருக்கிறது.

கோணேஸ்வரருக்காக வெகுவான குளங்களும் கட்டுவித்தான். நெல்விதைப்புத் திறையுங் கோயிலுக்கென ஒதுக்கிவிடப்பட்டது. இன்னும் குளக்கோட்டு மகாராசா தென்னை, புன்னை, கமுகு, ஏர், பசுவினம், மேதியினம் பலவித புஷ்பச் சோலைகள் எல்லாவற்றையும் இவ்வளவு இவ்வளவு எனக் கோணேஸ்வரருக்கென அர்ப்பணித்து, இது வெல்லாங் கோணேசருக்கென்று தாரைவார்த்துக் கொடுத்ததாக வரலாறு கூறுகிறது. குளக்கோட்டு மகாராசா திருக்கோணசலத்தின் மீதே கோணநாயகருக்கதிகமான சிவாலயங்களும், திருக்குளமும் கட்டுவித்தான்.

பரராசசேகரன், செகடிய தொழும்பு முறை செய்யக்குளக்கோட்டு மகாராசா வெவ்வேறான பணியாளரை அழைப்பித்தான். அவர்களுக்கு வேண்டியன கொடுத்துக் குடிநிலம் அளித்துப் பரம்பரையாகத் தொண்டு செய்து வருமாறும் பணித்தான். ஒருமுறை காஞ்சிபுர சிவாலய தரிசனஞ் செய்து கொண்டு நின்ற பொழுது ஒரு புலவன் சுவாமி முன்னிலையினின்று சிவதோத்திரங்கள் ஓதும் இராகப் பண்ணையும் ஆசார அலங்காரத்தினையும் கண்டு அப்புலவனிடஞ் சென்று 'எனக்கு உன் பரம்பரையில் ஓர் பிள்ளை தரவேண்டு'மென்று கேட்டான் அப்புலன் அரசனை வணங்கிப் பிள்ளை தரும்படி கேட்டது எதற்கோ என வினவினன். அரசனும் இலங்கையம்பதித் ... பாடுகளும் அளித்து அவர்களை பரம்பரையாக அவ்வுரிமைகளை அனுபவிப்பதோடு பெருமானுக்குச் செலுத்த வேண்டிய தொழும்புமுறை இவற்றில் வழுவக்கூடாது எனவும் விதித்தான் இத்தகைய சகல விபரங்களும் கல்வெட்டுக்களில் பாடப் ... ருக்கின்றன. கோணேஸ்வர மலைக்கு பூசை நடந்தபின் இவ்விக்கிரகங்களுக்கு பூசை நடை பெறுகின்றது. இங்கு தமிழர் மாத்திரமன்றிச் சிங்கள மக்களும் ஏனைய மதத்தினரும் பாகுபாடின்றி உள்ளன்போடு வழிபாடு செய்கின்றனர்.

... அரையில் ஒரு வேஷ்டி. தலையில் ஒரு துண்டு. பத்துப் பன்னிரண்டு வருடங்களாக அவருடைய உடம்பில் தண்ணீர் பட்டது கிடையாது. குளிப்பதுமில்லை, முழுகுவதுமில்லை. இத்தனை வருடங்களாக ஒரு நோய் நொடி வந்து அவர் மருந்து சாப்பிட்டதுமில்லை. குளிக்காமல் இருப்பதால் சாதா ... இப்படிச் சித்துகள் செய்து வந்தால் உங்களுடைய தபோபலம் குறைந்து விடுமே என்றேன். அதற்கு அவர், ''இப்படி ஏதாவது செய்து காட்டாவிட்டால் சனங்கள் என்னைக் கள்ளச் சாமி என்று நினைத்துக் கல்லால் அடிப்பார்கள்'' என்று கூறினர்.

— வழிப்போக்கன்

# முதலில் தண்ணீர் இல்லை; இப்போது கூரை இல்லை

## அச்சுவேலி குடியேற்றமக்கள் அவதி

யாழ்ப்பாணம், செவ்.

அச்சுவேலிசெல்வநாயகபுர அரசினர் குடியேற்றத்திட்ட வாசிகள் தங்கள் வீடுகளில் தொடர்ந்துஇருக்கமுடியாத நிலைஏற்பட்டுள்ளதாம். கடும் வெப்பத்தினல் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வீட்டைவிட்டு வெளியேற வேண்டியிருந்த வேளையில் மழைபெய்ததாகவும் ஆனல் மழை பெய்தும்கூட இங்கு இருக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

அரசினரால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளின் கூரைகள் நல்ல நிலையில் இல்லாததும் மற்றொரு காரணமாம். இது சம்பந்தமாக அண்மையில் இக்குடியேற்ற திட்டத்திற்கு நேரில் விஜயம் செய்திருந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் முறையிட்டிருந்தும் இது பற்றி எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையாம்.

இப்பகுதிமக்கள் குடியிருப்பு பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. ஆ. வென்சஸ் சிலாசிடம்புகார்செய்து கொண்டதைத் தொடர்ந்து அவர் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் இதுபற்றி முறையிட்டுள்ளார்.

## வீதி சீர்கேடு

கரம்பன், திங்.

கரம்பன் சண்முகநாதன் ஒழுங்கை மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதாக இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட கிராமசபையினரிடம் முறையிட்டுள்ளனர். கடந்த ஒரு வருட காலமாக இவ் ஒழுங்கையில் கற்கள் குவிக்கப்பட்டுள்ளனவாம். இது வரை அது திருத்தப்படாததால் பள்ளமும் மேடுமாக அது காட்சியளிக்கிறது.

## பொருள்

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்வேலி கந்தசாமி கோவிலடியைச் சேர்ந்த க. பரமலிங்கம் என்பவரால சுன்ணகம் கந்தையடியில ஒரு திறப்புக் கோர்வை கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில சேர்க்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

# 'சுவைகள் மூலம் நோய்களை நீக்கமுடியும்

அல்லைப்பிட்டி, திங்கள்

''இலங்கை மக்கள் அதிகமாக உறைப்புச்சுவையையே விரும்புகிறார்கள், உறைப்புச்சுவை உடம்பிலுள்ள நீரை வெளியேற்றக் கூடிய தன்மைவாய்ந்தது. அதிகமான உறைப்பை உண்டவுடன் கண்களினலும் நாசியினலும், வாயினலும் நீர் வெளியாகுவதை நாம் அவதானிக்கலாம்'' அது கோபஉணர்ச்சியை அதிகரிக்கச் செய்வதுடன் குடற்புண்கள், மூலரோகம் ஆகியனவற்றையும் உண்டாக்குகிறது. துவர்ப்புச்சுவை இதற்கு எதிரானது. அது உடல் அணுக்களை இறுக்கி உடலைப் பாதுகாக்கக் கூடியது. இது அரத்தல் தன்மையைக் கட்டுப்படுத்தக் கூடியது துவர்ப்புச் சுவைகளுடைய மூலிகைகளை உபயோகிப்பதின் மூலம் இரத்தப் பெருக்கு குடற்புண்கள் போன்றவற்றைசுதேசவைத்தியர்கள் குணமாக்குகின்றார்கள்''

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் மாநகரசபை இலவச ஆயுள்வேத வைத்திய சாலையில் நடைபெற்ற அகில இலங்கை உள்ளூராட்சி மன்ற ஆயுள்வேத வைத்தியர்களின் மகாநாட்டில் ஆயுளை வளர்க்கும் ஆயுள்வேதம்'' என்னும் பொருள்பற்றிப் பேசும்போது ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி விரிவுரையாளர் டாக்டர் வி. க. விஸ்வலிங்கம் குறிப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது: உணவுத் திட்டத்தின் மூலம் இன்னும் பல நோய்களைக் குணமாக்க முடியும். மன உணர்ச்சிகளை விருத்தியாக்குவதிலும் குறைப்பதிலும் கூடசுவைகள் முக்கிய பங்கெடுக்கின்றன. மகாத்மாகாந்தி உடல் உணர்ச்சிகளை அடக்குவதற்காக பால், பெருங்காயம் போன்ற உணவுப் பொருட்களை தன்னுடைய உணவுகளிலிருந்து நீக்கிவந்தது கவனிக்கத்தக்கது. மன அமைதிக்காக சுதேச வைத்தியர்கள் 'சர்ப்பகந்தா' என்ற மூலிகையைப்பாவிக்கின்றனர். இம் மூலிகையை மேல்நாட்டார் ஆராய்ச்சி செய்து அதிலிருந்து 'சேர்ப்பாசில்' என்னும் மருந்தைப் பாவிக்கின்றார்கள்.

உள்ளூராட்சிமன்றங்களும் அரசாங்கமும் ஆயுள்வேதத் துறையில் கூடியகவனம் எடுப்பதின் மூலம் பல விடயங்களை வெளிக்கொணர முடியும் என்றும் கூறினர் யாழ். மாநகரசபை அங்கத்தவர் திரு. விஸ்வநாதன் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையமும் மருந்துகமும் அமைப்பதற்கு பொதுமக்களும் மாநகரசபையும் அரசாங்கத்திடம் வற்புறுத்த வேண்டும் என்றும் யாழ். நூல்நிலையத்தின் மேற்பகுதியில் குளிரூட்டப்பட்ட அறையில் பண்டைய வைத்திய ஏடுகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுப்பதற்காக நாம் முயற்சிப்பதாகவும் கூறினர்.

யாழ்ப்பாண மாநகர மேயர் திரு. எஸ். நாகராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் டாக்டர் ஏ. கைலாயபிள்ளை, சி. வ. சந்திரசேகர், எம். எஸ். சுந்தரம் ஆகியோரும் பேசினர்.

# தானியக்களஞ்சியம் தடைப்பட்டது ஏன்?

## காங்கேசன்துறை ப. ச. அங்கத்தவர் கேட்பார்

காங்கேசன்துறை, சனி

காங்கேசன்துறையில் ஒரு கோடி ரூபா செலவில் கட்டத் திட்டமிட்டிருந்த தானியககளஞ்சியம் தடைபட்டதுஏன் என உணவு அமைச்சரிடம் கேட்பதற்கான கேள்வியை காங்கேசன்துறை பட்டினசபையின் 1-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. சு. கிருபாமூர்த்தி பட்டினசபையின் அடுத்த கூட்டத்தில் கேட்கவிருக்கிறர் பட்டினசபைத் தலைவர் திரு. ஆ. வ சதாசிவத்திடம் இதற்கான முன்னறிவித்தல கொடுத்துள்ளார்.

காங்கேசன்துறை வாடி வீட்டிற்கு அருகில் அமைக்கப்படுவதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டு இறுதியில் தடைசெய்யப்பட்டதன் காரணம் என்ன என்றும் இவர் தமது கேள்வியில் கேட்கவிருக்கிறர்

காங்கேசன்துறை துறைமுகத்தில் உணவுஇலாகா நான்கு களஞ்சிய அறையில் ஒன்றை தேவையற்றமுறையில் பாவிக்கப்படுவதாகவும் இதனல் கப்பல் இறக்குமதி வேலை தடைப்படுவதாகவும் இதைக்கொண்டு காங்கேசன் துறைமுகத்திற்கு கப்பல் அனுப்புவதை அரசாங்கம் அக்கறைகாட்டாது விட்டுவிடுமெனவும் அவர் காரணம் காட்டியுள்ளார்.

......

# தீர்த்தக்கரை வீதி திருத்தப்பட்டது

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு கிழக்கிலுள்ள பிரதான வீதிகளில் ஒன்ருன தீர்த்தக்கரை வீதி கடந்த 64ம் ஆண்டு சூருவளியின் போது முற்றிலும் கடலால் அரிக்கப்பட்டமையால் இவ் வீதி பாவிக்கமுடியாமற் போய்விட்டது. இவ்வீதியை திருத்தியமைக்கப் பல வழிகளையும் கையாண்டு பலனற்றுப்போய்விட்டது. ஆனல் கடந்த மாதம் இங்கு சிரமதான வேலைத்திட்டங்களைப் பரிசீலனைசெய்யக் கூட்டப்பட்ட கூட்டத்திற்குத் தலைமைவகித்த மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். சபாரத்தினம், நெடுந்தீவு கிழக்கில் உள்ள தீர்த்தக்கரை வீதியை இவ்வருட சிரமதான வேலைத்திட்டத்தில் சேர்த்துக்கொண்டார். இவ்வீதி திருத்தப்படுமேயானல் நெடுந்தீவு கிழக்கில் உள்ள மக்களுக்குப் பெரும் வசதியாக இருக்கும்.

# தொல்லை குறைகிறது

நெடுந்தீவு, திங்கள்

பல வருடங்களாக நெடுந்தீவு மககள் நிம்மதியான உறக்கமின்றி பட்டுவந்தகஷ்டம் தற்போது அமுல் நடத்தப்பட்டுவரும் நுளம்பெண்ணை அடிக்கும் திட்டத்தின் பலனக குறைந்து வருகின்றது.

சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட இத் திட்டம் நெடுந்தீவில்பெரும் வெற்றியை அடைந்துள்ளது. நுளம்பைவிட ஒருவகை நிலப்பூச்சி கோடை காலங்களில் நெடுந்தீவு மக்களுக்கு பெரும் தொல்லை கொடுத்தது. தற்போது நெடுந்தீவில் வீடு வீடாக நுளம்பெண்ணை அடிக்கப்பட்டுவருவதால் இவைக்கு முற்றுப்புள்ளி போடப்பட்டு வருகிறது. நெடுந்தீவு மத்தியும், கிழக்கும் இப்போது முடிவடைந்து வருவதால், தொடர்ந்து நெடுந்தீவு மேற்குக்கு நுளம் பெண்ணை அடிப்பு விஸ்தரிக்கப்படும் அப்பகுதியும் முடிவடைந்ததும் மீண்டும் இரண்டாவது தடவையாக நுளம்பெண்ணை நெடுந்தீவு பூராவும்அடிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

# மட்டக்களப்பு நகரசபைத் தலைவர் கோரிக்கை

மட்டக்களப்பு, திங்கள்

மருத்துவ தாதிகள் பயிற்சி நிலையமொன்றை மட்டக்களப்புப் பகுதியில் நிறுவுமாறு மட்டக்களப்பு நகரசபைத் தலைவர் திரு. ஜே. எல். திசவீரசிங்கி சுகாதார அமைச்சர் திரு. இ. எல். சேனநாயக்காவைக் கேட்டுள்ளார்.

மட்டக்களப்புப் பகுதியில் மருத்துவ தாதிகளின் பற்ருக்குறை குறித்துப் பல தடவை அரசாங்கத்துக்கு அறிவித்திருந்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனல நகரசபையின் இச்சேவை வேண்டி நிற்பவர்களுக்கு உதவ இயலாதவர்களாகவுள்ளனர். உடனடியாக மருத்துவதாதிகள் பயிற்சிக் கலலூரி ஒன்றை நிறுவ வசதியிலலாவிட்டால மருத்துவத்தாதிகள் சிலரையாவது அனுப்பி வைக்குமாறு மேயர் அமைச்சரைக கேட்டுள்ளார்.

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவில் இராணுவ முகாம் அமைக்கப்படவிருப்பதாக ஒரு செய்தி இங்கு நிலவிவருவதால் அதனை ஆட்சேபித்து இவ்விராணுவ முகாம் அமைக்க வேண்டாமெனக் கோரும் மகஜர்கள் தயாரிக்கும் திட்டத்தில் இங்குள்ள பல சங்கங்கள் முனைந்துவருகின்றன இதுசம்பந்தமாக நெடுந்தீவு கிராமசபை ஆட்சேபித்து ஒரு பிரேரணை அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தேவை

மட்டக்களப்பு பகுதியில் பிரபல்யமான நகை ஈடுபிடிக்கும் கடை ஒன்றுக்கு இந்த தொழில் அனுபவம் உடையவராய், நம்பிககைக்கு தகுதியுள்ளவராய், 40 வயதுக்கு குறையாதவராய் உள்ள உதவி மனேச்சர் ஒருவர் தேவை. தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். விளம்பர இல: C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்

921

# இந்திய வானெலியில் ஈழத்து கருணகரன்

வெள்ளவத்தை, திங்கள்

நெல்லியடி அரசினர் மத்திய மஹாவித்தியாலயத்தின் பழைய மாணவனுகிய செல்வன் க. கருணகரனின் இசைக்கச்சேரி எதிர்வரும் ஏப்ரல் 20-ம் திகதி அகில இந்திய வானெலியில் இடம் பெறவிருக்கிறது. சென்னையில் நடைபெற்றஇசைவிழாவொன்றில் அனேக தமிழக கலைஞர்கள் இவரைப்பாராட்டியுள்ளனர். செல்வன் கருணகரன் தற்போது சென்னை இசைக்கல்லூரியில் டிப்ளோமாவுக்குப் படித்துக் கொண்டிருக்கிறர். இவரது பிறப்பிடம் கரவெட்டியாகும்.

## விடிவை நோக்கி

கொழும்பு லும்பினி அரங்கில் மேடை யேற்றிப் புகழ் பெற்ற 'விடிவை நோக்கி' என்ற சமூக நாடகம் எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று நெல்லியடி காளி கோவிலடியில் அரங்கேற்றவிருக்கிறது. முழுக்கமுழுக்க நெல்லியடி வாலிபர்களே இந்நாடகத்தில் பாத்திரமேற்று நடிக்கவிருக்கின்றனர். இதற்கான தயாரிப்பு வேலைகளில் கொழும்பிலும் வெள்ளவத்தையில் ஒரு கோஷ்டி இயங்கி வருகிறது. இந்நாடகம் நெல்லியடிசண்முகானந்த நாடகசபையின் ஆதரவில் நடைபெறுகிறது.

## உரியவர் யார்?

யாழ்ப்பாணம், செ.

நீர்வேலி கந்தசாமி கோவிலடியைச் சேர்ந்த க, பரமலிங்கம் என்பவரால சுன்ணகம் சந்தையடியில கிடந்து எடுகசப்பெற்ற ஒரு திறப்புக கோர்வை பேர்சுடன் ஈழநாடு காரியாலயத்தில ஒப்படைககப்பட்டுள் ளது. உரியவர்கள் வந்து பெற்றுக கொள்ளலாம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63, ... அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ... அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org